விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 299 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை (13.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வல்லைப் பாலத்தில் விபத்து; தம்ரோ முகாமையாளர் மரணம்

### குழந்தைக்கு ஏடு தொடக்கிவிட்டு யாழ்.நோக்கிப் பயணித்தபோது துயரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வல்லைப் பாலத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்ற விபத்தில் தம்ரோ நிறுவனத்தின் யாழ்.முகாமையாளர் சம்பவ இடத்திலேயே உயிரி

19

யாழ்ப்பாணம் – நவாலியில்

## பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டில் நகை, பணம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நவாலிப் பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது வீட்டில் நகைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் குளியலறை ஊடாக உள்நுழைந்த திருடர்கள், ஆறரைப் பவுண்

19

## ஈஸ்டர் தாக்குதல், பிணைமுறி வழக்கு உட்பட

# 7 வழக்குகளின் விசாரணையை

# உடனடியாகத் துரிதப்படுத்துக



### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல், பிணைமுறி வழக்கு உட்பட 7 வழக்குகளின் விசாரணையை உடனடியாகத் துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் செலவைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு, தங்களது தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் இன்று பிற்பகல் 3 மணியுடன் நிறைவடையவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இதுவரையில் 8 பேர் மாத்திரமே தங்களது செலவு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செலவு அறிக்கையை வழங்காதவேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவ

19

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்

### ஜனாதிபதி அநுர பணிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவா

19

## வீதியில் முந்திச் செல்ல வழிவிடவில்லை

### யாழில் இளைஞன் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வீதியில் முந்திச் செல்ல வழிவிடவில்லை என மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் மீது தலைக்கவசத்தால் தாக்கு

19

## பிரதமர் படத்தை பயன்படுத்தத் தடை

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் ஊடாக நடத்தப்படும் வெவ்வேறு நிகழ்வுகள் மற்றும் வேலைத்திட்டங்களின்போது பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் படத்தைப்

19




## அமைச்சர்களின் சொத்து விபரம்

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள் பலருக்குச் சொத்துக்கள் எவ்வாறு கிடைத்தன என்பது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, முன்னாள் அமைச்சர்களான அனுபா பாஸ்குவல் மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தொடர்பில் ஏற்கெனவே நீதிமன்ற உத்தரவுகள் பெறப்பட்டுள்

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

- யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 100 அடி அகலமும் 170 அடி நீளமும் கொண்ட 5 பரப்பு காணியும்
- யாழ். பிறவுண் வீதியில் 2 பரப்புக் காணியும்
- யாழ். நல்லூர் குறுக்கு வீதியில் 10 பரப்பு காணியும்
- யாழ். பேருந்து நிலையத்திற்கு முன்பாக 3 கடையும்
- யாழ். மானிப்பாய் வீதியில் 5 பரப்புக் காணியும்
- யாழ். விக்டோரியா வீதியில் 16 பரப்பு காணியும், 12 பரப்பு காணியும்
- யாழ். K.K.S வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்பு காணியும்

உடன் விற்பனைக்கு உண்டு.

(C-1389)

**077 723 2535**

## இணையவழி நிதி மோசடி

### 114 சீனர்கள் கைது

கண்டி - குண்டகசாலைப் பகுதியில் இணையவழி நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 114 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 17 பெண்களும் 97 ஆண்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் 47 அறைகள் கொண்ட மாளிகையொன்றை வாடகைக்குப் பெற்று இந்த மோசடி செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ம-7)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடியில் 33 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00- மாலை 6.00
- தரகர் தேவையில்லை

(2292)

**070 168 3354, 070 668 3354**

## பாராளுமன்ற தேர்தல் – 2024

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட

**வேட்பாளர் அறிமுக விழா**

இடம் - யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கம்
காலம் - ஞாயிற்றுக்கிழமை (13/10/2024)
நேரம் - பிற்பகல் 3.00 மணி

கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள்
அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்

(C-002)

- இலங்கை தமிழரசுக் கட்சி - யாழ். மாவட்டம் -

## விற்பனைக்கு

வயல் தோட்டங்களுக்குப் பாவிக்கக் கூடிய உக்கிய குப்பைகள் (3 டிரக்டருக்கு மேல்) விற்பனைக்கு உண்டு.

(2285)

**077 129 1636**

## மணமகள் தேவை

1990 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பூராடம் 4 இல் செவ்வாய் 17 1/2 பாவம், சொந்தத் தொழில் செய்யும் மாத வருமானம் பெறும்(ஓட்டோ, சொந்த வீடு) மணமகனுக்கு சாதாரண மணமகள் தேவை. சீதனம் தேவையில்லை.

(2287)

**077 172 5450**

## வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனத்திற்கு யாழ் கிளையில் பணியாற்றக்கூடிய காப்புறுதி விற்பனை முகாமையாளர் மற்றும் காப்புறுதி ஆலோசகர்கள் வேண்டப்படுகின்றனர்.

**ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

கீழுள்ள Whatsapp இலக்கத்திற்கு விபரங்களைஅனுப்பவும்.

**077 171 2096**

(2278)

## PickMe யாழ்ப்பாணத்தில்

நீங்கள் வைத்திருக்கும் CAR/ VAN/ Lorry/ Motorcycle அனைத்தையும் PickMe Taxi சேவையில் இலவசமாக இணைத்து அதிக வருமானம் பெறலாம்.

(421)

**077 473 7737**

அழைக்கவும்.

## மணமகன் தேவை

யாழ். கத்தோலிக்க 1989 ஆம் ஆண்டு பிறந்த அரச பணி புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு : **077 967 2613**

## மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க 1986 ஆம் ஆண்டு பிறந்த தனியார் துறையில் பணி புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு : **077 967 2613**

(2293)

## மரண அறிவித்தல்

பிறப்பு
08 - 03 - 1938



இறப்பு
11 - 10 - 2024

## சிவகுரு பார்வதி

வெல்லன், மத்தொனி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு பார்வதி அவர்கள் 11.10.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை சிவகுருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் செல்லையா ஆகியோரின் சகோதரியும் சிதம்பரநாதன், சாந்தினி, ஜெயகாந்தன், ஜெகன்மோகன், மதனரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நேசகுமாரி, ஜெகநாதன் மற்றும் சுமதி, ஜெகவாணி, ஜமுனா ஆகியோரின் மாமியாரும் சஞ்சீவன், அர்ச்சனா, கானகன், இலக்கியா, கோபிசங்கர், சிவபானுகா, தர்மிகா, கஜீதா, ஆற்றலன், அபிசனா, ஆர்த்தீபன், அக்ஷயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.41/2, கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

077 430 2323
077 961 6288

(C-1385)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

## கந்தசாமி இராஜேஸ்வரி



தோற்றம் 1934.04.28
மறைவு 2024.10.10

கொக்குவில் மேற்கு கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராஜேஸ்வரி கடந்த 10.10.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதிரம்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சன், ஸ்ரீதயாளன், சுமதி, வதனி, ஸ்ரீநந்தன், நந்தினி, ஜெயமணி, ராகினி, ஸ்ரீகுமரன், ஸ்ரீஜீவன், ஜெயந்தினி, காலஞ்சென்றவர்களான ஸ்ரீபாலன், ஸ்ரீவிஜயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ரஞ்சிதமலர், நாகேஸ்வரி, சிலோன்மணி, சந்திரமலர், தர்சினி, நளினி, சிவரஞ்சினி, ஆறுமுகராசா, முருகமூர்த்தி, சிவஞானம், கனகநாயகம், சத்தியேந்திரன், இளமுருகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் முரளிதரன், சசிதரன், பிரபாகரன், ஹரிகரன், பகிரதன், கிருபாகரன், பிரியா, பிருந்தா, துஷ்யந்தன், சர்மினி, சதீசன், சர்வேஸ்வரன், வசந்தன், டிலக்ஷன், மிதுரஜன், மிதுஜனா, மிதுசனா, மிறோஜன், மிறோஜிகா, சபேஸ்வரன், சகிலா, சர்மிளா, சதீஸ், பிரதீபன், நிஷாந்தினி, பார்த்தீபன், பிருந்தினி, டிலக்சிதா, சிவதர்சினி, செந்தூரன், சயந்தன், சுவேந்திரன், சாந்தனா, மிக்கேஸ், சுவீட்டி, யதுசன், அக்ஷயன், சாருஜன், கம்சாயினி, ஓவியாஞ்சலி, யுவேதினி, சாந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் துஷாகரன், வைஷ்ணவி, அக்ஷயா, அக்ஷரா, சஞ்சனாஸ்ரீ, பிரசாந், பிரியங்கா, அபிசயன், சயன், அக்ஷயா, சங்கயன், சர்வின், நிவேதா, சஞ்சீவ், ஜீவிதா, பவியா, பிரியா, அகாஷ், அபினாஷ், அஸ்வினா, நிக்சா, நதீஸ், சாயிஷன், தபிசாயினி, துஷாந், ஆதிலன், ஆகாஷ், ஆருஷன், ஆரபி, ரிஷாந்தன், ஆயுஷன், ஆதீஸ், ஆனேய், ஆருத்ரா, சாய், அச்சு, பிரிஷா, சிறீசா, சபரிஷன் நிருபா, சஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கேணியடி.

(2284)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வரணி மத்திய கல்லூரி அதிபர்

# உயர்திரு ஆ.தங்கவேலு அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்



## ஆசிச்செய்தி

அதிபர் என்பவர் தம் பாடசாலையில் மட்டுமல்லாது தன்னைச் சார்ந்த சமூகத்திலும் தம் கல்வி. ஆளுமை மற்றும் ஆற்றல்களால் பாரிய தாக்கத்தைச் செலுத்தி அனைத்து இளம் தலைமுறையினரின் வாழ்வியலையே மாற்றும் பாரிய சக்தி மிக்கவர். அவ்வாறான அதிகாரம் மற்றும் பலத்தை சிறப்பாகப் பயன்படுத்தி தமது கடமையை சிறப்புற மேற்கொள்பவர் திரு.ஆறுமுகம் தங்கவேலு அவர்கள் என்றால் மிகையாகாது.

இவர் 10.06.2022 ஆம் ஆண்டு முதல் 11.10.2024 வரை தமது சேவையை யா/வரணி மத்திய கல்லூரிக்கு ஆற்றி. தமது மணிவிழாவையும் 11.10.2024 அன்று நிறைவு செய்து தற்போது ஓய்வு பெற உள்ளார்.

இவரின் சேவைக்காலத்திலே பாடசாலையின் வளர்ச்சிக்காக தம்மை முழுமனதோடு அர்ப்பணித்தவர். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்னும் கொள்கையோடு சேவையாற்றி இன்று ஓய்வு பெற இருக்கும் திரு.ஆறுமுகம் தங்கவேலு அவர்களை வாழ்த்தி சிட்டிவேரம் கண்ணகை அம்பாளின் அருளோடு அவர்கள் ஆரோக்கியமாக இருந்து தமது ஓய்வுக்காலத்திலும் சமூகத்திற்கு தம்மாலான சேவையை செய்ய பரம்பொருள் துணை நிற்க வேண்டும் என பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

**சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக்குருக்கள்,**
**ஸ்ரீ சக்தி கிரியா குருமணி, பிரதமகுரு,**
**சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம்.**



## அந்தகாரத்தின் அகல்விளக்கு

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் தாக்கத்தை ஏதோவொரு வடிவத்தில் சந்தித்திருந்த பகுதிகளான கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பகுதிகளில் தனது சேவைக்காலத்தை அர்ப்பணித்திருந்த ஒரு அதிபர் என்ற வகையில் யுத்தகாலத்தில் ஏற்படும் இழப்புகளிலிருந்து மாணவர் மற்றும் சக ஆசிரியர்களைப் பாதுகாப்பது முதல் மூன்று கட்ட இடப்பெயர்வுகளின் போதும் மாணவர் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான ஆவணங்களைப் பாதுகாப்பது ஈறாகத் தமது சேவைக்காலம் முழுவதிலும் தம் உயிரையும் பொருட்படுத்தாது சேவை ஆற்றியிருக்கக்கூடிய ஒரு அதிபராகவே திரு. ஆறுமுகம் தங்கவேலு அவர்களைக் காண்கிறேன்.

எனவே அதிபரின் சேவை இன்றைய காலத்தில் ஆற்றப்படும் சேவை போன்றதல்ல என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து அவரது ஆத்மார்த்தமான சேவையை வாழ்த்த வேண்டும் என்பதுடன் அவரது ஓய்வுக்காலம் கல்விப்பணியுடனேயே சிறக்க வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா,**
**கணிதப் பேராசிரியர்,**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



## மணிவிழா வாழ்த்துச் செய்தி

தென்மராட்சியின் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் வரணி மத்திய கல்லூரி சமூகத்தால் விரும்பி அழைக்கப்பட்டு கடந்த இரண்டு வருடங்களிலும் கல்லூரியின் பௌதீக வளங்கள் ஆசிரிய வளங்கள் மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் மட்டுமன்றி விளையாட்டு மற்றும் கலை கலாசார போட்டிகளிலும் உச்ச சாதனை படைத்து மாவட்ட மாகாண மற்றும் தேசிய ரீதியில் பல சாதனைகளை படைக்க வித்திட்ட பெருமைக்குரியவரான தங்கவேலு அதிபர் அவர்கள் அதிபர் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரது சமூகப் பணி தொடரும்.

இவரது ஓய்வு காலம் மிகவும் சிறப்பாக அமையவும் இவரது சேவை எமது சமூகத்திற்கு பலவழிகளிலும் கிடைக்க வேண்டும் எனவும் அதனை அவர் வழங்குவதற்கு ஏற்ற ஆளுமை அவரிடம் உள்ளது. அவரது பணி தொடர ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் சிறந்த உடல் உள ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென எல்லாம் வல்ல சிட்டிவேரம் கண்ணகித் தாயின் பாதார விந்தங்களை வேண்டிநிற்கின்றேன்.

**திரு. சிதம்பரநாதன் உதயகுமார்,**
**முதுநிலை விரிவுரையாளர், பொருளியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



## மணிவிழா நாயகனை வாழ்த்துகிறேன்

தென்மராட்சி வலயத்தின் வரணி மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்து 11.10.2024 இல் சேவையிலிருந்து ஓய்வு பெறும் உயர் திரு.ஆறுமுகம் தங்கவேலு அவர்களை வாழ்த்துவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை இட்டு அகமகிழ் வெய்துகின்றேன். எனது சேவை காலத்தில் கல்வி சமூகத்தாலும் பெற்றோர்களாலும் மாணவ சமூகத்தாலும் ஓர் உயர் அந்தஸ்தில் வைத்து மதிக்கப்பட்ட ஒரு சிலரில் ஆ.தங்கவேலு முதன்மையானவர்.

திரு தங்கவேலுவின் சகல திறமைகளையும் நன்கு அவதானித்த தென்மராட்சி கல்வி வலயம் திரு. தங்கவேலுவை 2022 வரணி மத்திய கல்லூரியின் அதிபராக நியமனம் செய்தது.

அன்று தொடக்கம் இன்று வரை இப் பாடசாலை அரசின் சகல வரப்பிரசாதங்களையும் பெறுவதற்கு அதிபரின் விடாமுயற்சியே காரணம் என்றால் அது மிகையாகாது தான் கற்பித்த பாடசாலைகளிலும் சரி அதிபராகப் பதவி வகித்த பாடசாலைகளிலும் சரி அதன் முயற்சிக்கு தனது முயற்சியாக கருதி செயலாற்றியவர் என்பதுடன் பெற்றோர், பழைய மாணவர்கள், கல்வித் திணைக்களம் அனைத்தாலும் மதிக்கப்பட்டவர். தனது ஓய்வு காலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடனும் குடும்பத்துடனும் மகிழ்ச்சியாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**ப. அரியரத்தினம்,**
**முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும்**
**மேலதிக மாகாணக் கல்வி பணிப்பாளரும்,**
**வடமாகாணம்.**



## உயர்திரு. ஆறுமுகம் தங்கவேலு (BED, SLPS-I)

தாய் தந்தை :- ஆறுமுகம் கதிராசிப்பிள்ளை
பிறந்தது :- 1964.10.12
பிறப்பிடம் :- பச்சிலைப்பள்ளி

**கல்வி**

ஆரம்பக்கல்வி :- கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை
கனிஸ்ட இடைநிலை :- கிளி/பளை ம.வி.(06-11)
சிரேஸ்ட இடைநிலை :- யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

**சேவை விபரம்**

ஆசிரிய நியமனம் :- கிளி/கரியாலை நாகபடுவான் இல -01 அ.த.க.பாடசாலை (தற்போது முழங்காவில் ம.க) - 06.08.1988 -14.01.1990
யா/ பலாலி ஆசிரிய கலாசாலை - விசேட பயிற்சி விவசாயம் - 15.01.1991 - 31.12.1991
யா/கிளி முழங்காவில் ம.வி - 01.01.1992 - 31.12.1995
கிளி/ இயக்கச்சி அ.த.க.பாடசாலை - 01.01.1996 - 31.12.1996
கிளி/முழங்காவில் ம.வி - 01.01.1997 - 22.03.1998
கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை - 23.03.1998 -31.12.2000
கிளி/அல்லிப்பளை சி.சி.த.க.பாடசாலை :- கடமை நிறைவேற்று அதிபர் - 01.01.2004 - 31.12.2008
யா/கைதடி நுணாவில் G.T.M.S - 01.01.2009 - 30.11.2010 ஆசிரியர்
யா/கைதடி நுணாவில் G.T.M.S - 01.12.2010 - 08.11.2012 பதில் ஆசிரியர்
யா/கைதடி நுணாவில் G.T.M.S - 09.12.2012 - 08.11.2018 அதிபர் - SLPS -II
யா/கைதடி நுணாவில் G.T.M.S - 09.11.2018 - 09.06.2022 அதிபர் - SLPS -I
யா/வரணி மத்திய கல்லூரி - 10.06.2022 - 11.10.2024 அதிபர் - SLPS -I



## மனம் நிறைந்த மகத்தான சேவையாளன்

எங்கிருந்தோ வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டார். தன் சொந்த ஊர் போல் நினைத்து எம்மை சொந்தங்கள் என எண்ணி சேவைதனைத் தொடர்ந்தார். பிள்ளைகளை புரிந்து கொண்டார். பெற்றோரை அன்பாலே இணைத்துக் கொண்டு புதுவேகம் எடுத்தார். இரண்டாண்டு முடிவதற்குள் இவர் உழைப்பால் உன்னதத்தை எம்பள்ளி காண்பதற்கு காரணனாய் திகழ்ந்த மகான் ஆறுமுகம் தங்கவேலு அவர்கள்.

எமது கல்லூரியில் அதிரடியாக ஆட்டத்தைத் தொடங்கினார். அழகுபடுத்தினார், புனரமைப்புச் செய்தார், புத்தூக்கம் பாச்சினார், புது எழுச்சி ஊட்டினார். நின்று புன்னகைத்தார். எல்லாம் மாறியது. புதுவேகம் கண்டது. ஆசிரியர்கள் இவர் வழி சென்றார்கள். மாணவர்கள் சாதனை செய்தார்கள். எமது கல்லூரி தென்மராட்சியில் உயர்வாகத் திகழ்கின்றது.

இவர் செய்த சேவைக்கு கைமாறு செய்ய எமக்கு முடியாது. நன்றி சொல்ல வார்த்தை கிடையாது போற்றுகிறோம், வாழ்த்துகிறோம் என்றும் அவர் எங்கள் உறவானார். ஓய்வு காலம் நலமாக அமைய சுட்டிபுரம் கண்ணகை அம்மனின் அருளை வேண்டி நிறைவு கொள்கின்றேன்.

**திரு.பாலகிருஸ்ணமூர்த்தி,**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**



## செஞ்சொற்செல்வர் ஆசியுரை

கல்விச் சேவையில் நிறைவு கண்டு மகிழ்வுடன் மணிவிழாக் காணும் மனித நேயம் மிக்க அதிபர் திரு.ஆ.தங்கவேலு அவர்களை ஆசீர்வதிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன். நல்லாசிரியராக. நல்ல அதிபராக அரச விருதுகளையும் பெற்று. மாணவர் மனதிலும் பெற்றோர் மனதிலும் நன்றிக்குரிய பெருமகனாகவும் திகழ்ந்தவர். கடமை நேரத்தில் மட்டும் சேவை செய்யும் அதிபராக அல்லாமல் எந்நேரமும் தான் சார்ந்த கல்லூரிச் சூழலையும் அழகுபடுத்தி மாணவர்களையும் அவரவர் இயல்பறிந்து குடும்பம் பின்னணி அறிந்து நெறிப்படுத்தியதொரு சேவையாளன். தன் விடாமுயற்சியால் தன் வாண்மையையும் மேம்படுத்தி கல்லூரியின் மாணவர்களையும் பல்துறை வல்லுநராக்க அரும்பாடுபட்டவர்.

கல்விச் சேவை மட்டுமன்றி கடவுள் பக்திமிக்கவராகவும். பொதுப்பணிகளில் விருப்புடன் ஈடுபடுபவராகவும் விளங்கும் திரு.ஆ.தங்கவேலு அவர்கள் எம் சிவபூமி நிறுவனங்களின் செயற்பாடுகளிலும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குபவராகவும் தன்னாலான சேவைகளை விருப்புடன் செய்பவராகவும் திகழ்கிறார். அவரது அரசசேவை ஓய்வு மேலும் பலசமூக சேவைகளை மேற்கொள்வதற்கு வசதியாகிறது. நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் எல்லா நலன்களும் பெற்று அறப்பணி தொடர மனம் நிறைந்து வாழ்த்தி இறையாசியையும் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பளை,**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை,யாழ்ப்பாணம்.**



## தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளரின் வாழ்த்துரை

எமது கல்வி வலயத்தின் ஆண்டு 1AB தரப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் யா/வரணி மத்திய கல்லூரியின் அதிபர் திரு.ஆறுமுகம் தங்கவேலு அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதில் புளகாங்கிதம் எய்துகின்றேன்.

எமது வலயத்தின் யா/கைதடி அ.த.க பாடசாலையில் அதிக காலம் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியதுடன் மும்முறை 'குரு பிரதீபா பிரபா' விருதினை பெற்றுக் கொண்டவர். 2018 இல் தேசிய உற்பத்தித் திறன் விருதுப் போட்டியில் தென்மராட்சி வலயத்திலிருந்து போட்டியிட்டு மெச்சுரை விருதினைப் பெற வழி சமைத்தவர். விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களைத் தேசியம் வரை அனுப்ப உழைத்தவர்.

வரணி மத்திய கல்லூரியில் நவீன தொழில்நுட்ப சாதனங்களுடன் செயற்பாட்டு அலகுகள் உருவாக்கப்பட்டு வினைத்திறனான கற்றல், கற்பித்தல் முறைக்கு வழிகாட்டியவர். இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தி சாதனை படைக்க வழிசமைத்தவர். பாடசாலையின் கட்டுமானம் மற்றும் புனரமைப்பு பணிகளை பல்வேறு தரப்பினரின் உதவியுடன் செயற்படுத்தி கவின் நிலைப்படுத்தியவர். பாடசாலைச் சமூகத்துடன் நல்லுறவைப் பேணி மாணவர்கள் இணையும் எண்ணிக்கை அதிகரிக்க வழிப்படுத்தியவர். இத்தகைய அதிபரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**திரு.கி. கமலராஜன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.**



## தங்கச் சேவையின் தங்க நாயகனே வாழ்க

தங்கச் சேவையாளனுக்கு 60 வந்து விட்டதா! என்ற எண்ணம் ஒருபுறம் இன்னொரு புறமாக இவ்வாறான சிந்தித்து செயலாற்றும் அதிபர்களை எங்கே காணலாம் என்ற அங்கலாய்ப்பு என்னைச் சுற்றி வலம் வருகிறது.

சேவை செய்ய வேண்டும். எனக்கு தந்த பணியை சீராட்டி தாலாட்டி எல்லா எதிர்பார்ப்புகளையும் எனதாக்கி பணியை தொடரு வேன் எனவும் எங்கு சென்றாலும் எனது சேவை எனது பாத்திரத் திற்கேற்ப சீராக நடத்துவேன். என்பது வரணிக் கல்லூரியில் அல்ல இவர் முழங்காவில் பள்ளியில் தனது முதற் சேவையை தொடங்கிய போது செய்து காட்டிய ஆசிரிய பெருந்தகை. போக்குவரத்து இல்லாத நாட்களில் காடுகளும், நுளம்பும், தொடர்பாடல் ஒன்றுமே இயங்காத அந் நாட்களில் முழங்காவில் அதிபர் ஆசிரியர் குழாம் முக்கிய பங்காற்றி பள்ளிக்கு வருவோர் போவார் எல்லோரும் பச்சை பசேலென பூத்துக் குலுங்கிய மரக்கறி பயிர்களை பார்த்து பரவசமடைந்தமைக்கு எமது அதிபர் தங்கவேல் அவர்கள் ஆசிரியராக ஆற்றிய பணி பெரும் பங்காகும்.

தங்கவேல் என்னும் தங்க மனிதர் இவரது சேவையால் அதிபர் சேவையின் தரம் மேன்மைப்படுகின்றது தனது ஓய்வு காலத்தில் ஊக்கமுடன் இன்றைய அதிபர்களை வழி நடத்தும் எல்லா சௌபாக்கியங்களும் பெற்று மகிழ்வான இளைப்பாறும் காலம் அமைய வேண்டும் எனவும் வாழ்த்தி மகிழ்வடைகின்றேன்

**த. குருகுலராஜா,**
**ஓய்வு நிலை கல்வி பணிப்பாளர்,**
**முன்னாள் கல்வி அமைச்சர், வடக்கு மாகாண சபை.**



## சாதனைச் செம்மல் தங்கவேலு அவர்கள்

அதிபர் அவர்கள் இங்கு வந்ததன் பின் தனது உயர்ந்த பண்பினால் எல்லோரிடமும் அன்பாகவும். பண்பாகவும். ஆதரவாகவும் பழகி தனது இனிய பேச்சுக்களால் ஒன்று சேர்ந்தார். அதை விட அவர் தனது சிறந்த நிர்வாக ஆற்றலினாலும் மிகுந்த நேர்மையான பக்கம் சாராத நடத்தையாலும் பெற்றோரின் பெருமதிப்பை பெற்றிருந்தார். மேலும் செய்யும் தொழிலே தெய்வம் என்ற எண்ணத்தோடு தனது கடமையை அதிக அக்கறையோடும் சமூகப் பற்றோடும் கடமையாற்றி ஆசிரியர். மாணவர் மற்றும் எல்லா நலன் விரும்பிகளின் பாராட்டையும் போற்றுதலையும் பெற்றுக் கொண்டார்.

அவர் மனம் மாணவர் நலனையே மையமாகக் கொண்டிருப்பதனால் அவருடைய ஓய்வு காலம் அவரும். அவருடைய குடும்பத்தினரும் மங்காத. மறையாத புகழோடும். திடகாத்திரமான நற்சுகத்தோடும். மிக நீண்ட ஆயுளோடும். என்றும் குறையாத செல்வச் சிறப்போடும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**சி.துரைராசா,**
**யா/வரணி மத்திய கல்லூரி-முன்னாள் அதிபர்,**
**யா/வரணி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கக் காப்பாளர்,**
**சாவகச்சேரி பிரதேச சபை-முன்னாள் தவிசாளர்.**

(13386)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றத் தேர்தல்- 2024

# மாற்றத்துக்கான விதை மாம்பழமே





சுயேட்சை குழு 14
(சனநாயக தமிழரசு கூட்டமைப்பு)

# ஈ.சரவணபவன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உதயன் குழுமத்தலைவர்)

(C-001)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபரீத முடிவெடுப்போர் இலங்கையில் அதிகரிப்பு

## உளநல மருத்துவர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் இலங்கையில் அதிகரித்துள்ளதாக இலங்கை உளநல வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அந்த சங்கத்தின் செயலாளர் சஜீவன அமரசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியாக இந்த ஆண்டில் மாத்திரம் 720,000 இற்கும் அதிகமானோர் தமது உயிரை மாய்த்துக் கொண்டனர்.

இலங்கையில் நாளொன்றுக்கு 8 பேர் வரை உயிரை மாய்த்துக்கொள்கின்றனர்.

பல மனநல காரணங்கள் இதில் தாக்கம் செலுத்துகின்றன.

அவற்றில் மன அழுத்தம் பிரதான பிரச்சினையாகவுள்ளது.

பிரச்சினைகளை எதிர் நோக்குவதில் உள்ள சிக்கல்கள் காரணமாகவும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இலங்கையில் இதனைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அவ்வாறு மன அழுத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குவோரை அடையாளம் கண்டு, அவர்களுக்கான சிகிச்சைகளை வழங்க வேண்டும் என இலங்கை உளநல வைத்தியர் சங்கத்தின் செயலாளர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள்ளார். (ந)

# ஊழல்வாதிகள் ஒதுங்குவது அநுரவுக்கு கிடைத்த வெற்றி

## என்கிறார் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)

ஊழல் அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து ஒதுங்குவது அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியானதற்கு கிடைத்த வெற்றி என தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தோல் வியிலிருந்து தப்புவதற்காக ஊழல் மற்றும் இனவாத அரசியல்வாதிகள் இந்த முறை தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்துக் கொண்டுள்ளனர்.

அடுத்த தேர்தலில் அவ்வாறான அரசியல்வாதிகள் வேட்பாளர்களாக நிற்காத நிலையை ஏற்படுத்தியமை பொதுத்தேர்தலிற்கு முன்னர் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த பெருவெற்றி என ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அநுரகுமாரவை ஜனாதிபதியாக தெரிவு செய்தமைக்காக மக்களிற்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

இது இறுதியில் ஊழல் இனவாத அரசியல் வாதிகளின் அரசியல் வாழ்க்கையை முடித்துவைத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமாரவிற்கு வாக்களித்ததன் மூலம் மக்கள் சிறந்த செயலை செய்தனர் இது இறுதியில் ஊழல் அரசியல் வாதிகளை அகற்றியது.

இந்நிலையில், தோல்வியை தவிர்ப்பதற்காக இந்த அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துள்ளனர் எனவும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (ந)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 40,494 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 17,159 ஆகும்.

இந்நிலையில், கொழும்பு மாவட்டத்திலிருந்து 10,150 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ந)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

கடை வாடகைக்கு
ஆஸ்பத்திரி வீதியில், சத்திரச் சந்திக்கு அருகாமையில் கடையொன்று வாடகைக்குண்டு.
பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு மட்டும். (சி-2466)
தொடர்பு- 076 570 4141

மணமகன் தேவை
1994, இந்து, புனர்பூசம், CIVIL ENGINEER
பூர்வீகம் - உடுவில், வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகன் பதிவு இல: 11091.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401 (சி-2464)
www.EQMarriageService.com

மணமகள் தேவை
1984, இந்து, மிருகசீரிடம், ENGINEER
பூர்வீகம் - கரவெட்டி, வதியுமிடம் - NETHERLANDS
மணமகன் பதிவு இல: 10967.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401 (சி-2464)
www.EQMarriageService.com

மணமகள் தேவை
1983, இந்து, சதயம், DRAFTSMAN
பூர்வீகம் - புங்குடுதீவு, வதியுமிடம் -யாழ்ப்பாணம்
மணமகன் பதிவு இல: 11075.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401 (சி-2464)
www.EQMarriageService.com

மணமகன் தேவை
1994, இந்து, ஹஸ்தம், MANAGER
பூர்வீகம் - கரவெட்டி, வதியுமிடம் - SWISS
மணமகள் பதிவு இல: 11058.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401 (சி-2464)
www.EQMarriageService.com

# இராசிபலன்

13.10.2024
புரட்டாதி 27, ஞாயிற்றுக்கிழமை,
ஏகாதசி பின்னிரவு 2.49 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 11.52 மணிவரை

சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம்- 4.32- 6.02 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்
திருவாதிரை,புநர்பூசம்

வளவன்

**மேஷம்** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மிதுனம்** நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், பண விரயங்கள் மேலோங்கும் நாள், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும்.

**கடகம்** நீண்ட நாளைய நெருங்கிய நண்பர்கள் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட் களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்,சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மனநிறைவு கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், வளர்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு.

**தனுசு** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய் தொழில் மேன்மையுண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் கூடும்.

**மகரம்** பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தொட்ட காரியங்களில் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, உறவினர்கள் நலன் சார்ந்த சுப விரயங்கள் ஏற்படலாம்.

**மீனம்** அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

சோம்பலுக்கு ஒருநாள் கொடுத்தால் அடுத்த நாளையும் திருடிவிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஜயதசமியை முன்னிட்டு இடம்பெற்ற மானம்பூ உற்சவம்








(யாழ்ப்பாணம்)
நவராத்திரியின் இறுதி நாளான விஜயதசமியான நேற்று யாழில் உள்ள இந்து ஆலயங்களில் மானம்பூ உற்சவங்கள் பக்திபூர்வமாக இடம்பெற்றன.

நல்லூர் கந்தசுவாமி, தெல்லிப்பழை துர்க்கை அம்மன், கீரிமலை நகுலாம் பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயம் உட்பட பல ஆலயங்களில் இடம் பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-33)

## கட்சி பிளவடைந்தமை வருத்தமளிக்கிறது

### மாவை சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)
தமிழரசுக் கட்சியில் சிலரின் தன்னிச்சையான முடிவுகளை நான் ஏற்கவில்லை. அதனால் தேர்தல் அரசியலில் இருந்து விலகி இருக்கத் தீர்மானித்து நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் விலகி இருக்கிறேன் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக தமிழரசு கூட்டணியினர் நேற்று முன்தினம் மாவை சேனாதிராசாவைச் சந்தித்து கலந்துரையாடி இருந்தனர்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு மாவை சேனாதிராசா கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் தெரிவின் போது எம்மால் பிரேரிக்கப்பட்ட வேட்பாளர் களைப் புறம் தள்ளி தன்னிச் சையாக முடிவுகளை எடுத்து வேட்பாளர்களை நியமித்துள்ளனர். அதனை நான் ஏற்கவில்லை. அதனால் இம்முறை தேர்தலில் இருந்து விலகி இருக்கிறேன். ஆனாலும் நான் தமிழரசு கட்சியில் இருந்து விலகவில்லை.



தமிழரசுக் கட்சியில் வேட்பாளர் பட்டியலில் நிராகரிக்கப்பட்டவர்கள் வேறு கட்சிகளில் போட்டியிடுகின்றனர். நாங்கள் ஒன்றுபட்டு இனவிடுதலைக்காக போராட வேண்டியவர்கள்.

இவ்வாறு பிளவுபட்டு நிற்பது துயரமே. எனவே இந்தத் தேர் தலின் பின்னாவது மனஸ்தாபங்களை விட்டு அனைவரும் இன விடுதலைக்காக ஒன்றுபட வேண்டும் என தெரிவித்தார். (6-33)

## வணிக நிலையமொன்றில் போதை மாத்திரை விற்பனை

### ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
பலசரக்கு கடையொன்றில் போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த கடை உரிமையாளர் பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாயில் பலசரக்கு கடையொன்றில் போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கடையினை பொலிஸார் சோதனையிட்ட வேளை 50 மாத்திரைகளும் ஒரு தொகை வெற்று மாத்திரை அட்டைகளும் காணப்பட்டுள்ளன.

அதனை அடுத்து உரிமையாளரை கைது செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, தான் போதை மாத்திரைகளை உட்கொள்வதாகவும் தெரிந்த நபர்களுக்கு மாத்திரமே அவற்றை விற்பனை செய்வதாகவும் கூறியுள்ளார். அத்துடன் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் 150 மாத்திரைகளை வாங்கி வந்ததாகவும் அவற்றில் சிலதை விற்று விட்டதாகவும் ஏனையவற்றை தானே உட்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கைதானவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (6-33)

## மக்களின் அரசியல் சிந்தனை அதிகாரத்தை வலுப்படுத்தும்

### டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)
இம்முறை மக்கள் மத்தியில் உருவாகியுள்ள அரசியல் மாற்றம் ஈ.பி.டி.பியின் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்தும் என நம்புவதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்கள் பிரதேச பொறுப்பாளர்கள், கட்சி உறுப்பினர்களை யாழில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஈ.பி.டி.பியின் தேசிய நல்லிணக்கம் எப்போதும் வலுவாகவே இருக்கின்றது. அதனால் தான் மத்தியில் உள்ள அரசாங்கத்தோடு ஆட்சியில் பங்கெடுப்பதற்கு, பாராளுமன்ற தேர்தல்களில் மக்கள் வழங்குகின்ற ஆணையின் பலமே அடிப்படையானது.

மேலும் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் யதார்த்த அரசியலையும் ஈ.பி.டி.பியின் கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் இருக்கின்ற நியாயத்தினையும் புரிந்து கொள்ளும் வகையில் கட்சியினால் மேற்கொள்ளப்படும் தேர்தல் பரப்புரைகள் அமைய வேண்டும் என்பதே தனது விருப்பமாகும். அதற்கான கடின உழைப்பு மிக அவசியம் எனவும் வலியுறுத்தினார். (6-33)


## கசிப்புடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கசிப்பினை எடுத்துச் சென்ற வேளை பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (6)

## கனேடிய உயர்ஸ்தானிகர் யாழ்.தீவகப் பகுதிக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)
இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் யாழ். தீவக பகுதி கடற்றொழில் அமைப்புக்கள் மற்றும் தீவக பெண்கள் வலையமைபின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ். புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சனசமுக நிலைய மண்டபத்தில் நேற்றுக் காலை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில் வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா, மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்ச்சன் பிகிராடொ, தீவக பெண்கள் வலையமைப்பினர், தீவக பகுதி கடற்றொழில் அமைப்புக்கள் என்பன கலந்து கொண்டனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 463
Viber 076 636 3378



# உதிரிகளாகும் தமிழர் பலம்

பாராளுமன்றத் தேர்தல் 2024 இற்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவு பெற்றது.

இம்முறை வடக்கில் யாரும் எதிர்பாராத விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வரலாற்றில் இல்லாத அளவு கட்சிகளும் சுயேட்சைகளும் தேர்தலில் குதித்திருக்கின்றன.

இது ஆரோக்கியமான விடயமன்று. தமிழினத்தின் பலத்தை இழக்கச் செய்வதாயும் ஒட்டுக்களை பிரித்தெடுக்க மேற்கொள்ளப்படும் செயலாகவும் இவற்றைப் பார்க்க முடியும்.

ஏற்கனவே 7 ஆக இருந்த யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 6 ஆக குறைக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான உதிரிக் கட்சிகளின் வருகை தமிழினத்தின் ஒட்டுமொத்த ஸ்திரத் தன்மையினையும் உடைத்தெறியவல்லது என்பதை நாம் புரிந்து கொள் வேண்டும்.

தவிர தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் உட்பூசல் முற்றி வெடித்த நிலையில் சட்டத்தரணி கே.வி.தவராஜா தலைமையில் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு என்ற பெயரில் இம்முறை தேர்தலில் களம் இறங்குகின்றனர்.

குறித்த தேர்தல் களத்தில் தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்த பல முக்கிய புள்ளிகளும் ஏனைய சில கட்சிகளுடன் இணைந்துள்ளமை சாதாரணமான விடயமாகப் பார்க்க முடியாது.

நிச்சயம் இது தமிழரசுக் கட்சியின் வெற்றியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே உண்மை. தமிழரசுக் கட்சியில் உள்ள சிலர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு கட்சியில் பெரும் பதவியில் இருப்பவர்கள் தொடங்கி சாதாரண தொண்டர் மற்றும் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர் வரை இருந்த நிலையில் சட்டத்தரணி கே.வி.தவராஜா அணியின் தேர்தல் பிரவேசம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாதாயினும் கணிசமான வாக்குப் பிரிப்பை மேற்கொண்டே தீரும்.

அத்துடன் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தி அதில் கணிசமான வெற்றியையும் கண்ட ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி இம்முறை ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் முனைப்புடன் களமிறங்கியுள்ளது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டை உடைத்து தனிவழி சென்ற தமிழரசுக் கட்சியின் ஏனைய கட்சிகள் இணைந்ததான கட்சியே ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பாகும்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில் முன்னாள் மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையிலான குறித்த அணியில் இளம் வேட்பாளர்கள் அதிகம் இணைக்கப்பட்டுள்ளமையினைக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் போட்டியிட்ட மணிவண்ணன் கட்சித் தலைமையுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து நீக்கப்பட்டிருந்தாலும் அவரின் மாநகர சபை ஆட்சிக்கு எவ்வித பாதிப்பையும் குறித்த பதவி நீக்கம் ஏற்படுத்தவில்லை.

> **யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்: 6 ஆசனங்கள், 23 அரசியல் கட்சிகள், 21 சுயேட்சைக் குழுக்கள், 396 போட்டியாளர்கள் களத்தில். வன்னித் தேர்தல் மாவட்டம்: 6 ஆசனங்கள், 22 அரசியல் கட்சிகள், 25 சுயேட்சைக் குழுக்கள் 423 பேர் களத்தில்.**

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் இரண்டு ஆசனங்களை பெற்றுக்கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இம்முறை தேர்தலில் களமி றக்கபட்டிருந்தாலும் கடந்த தேர்தலுடன் ஒப்பிடும் போது அவர்களுக்கான வாக்கு வங்கி சற்று குறைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவை அனைத்தையும் கடந்து நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியீட்டி ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலில் பிரபலமானவர்கள் உள்ளடங்கியிருப்பது அவத னிக்கக் கூடியதாக உள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அநுர அலை வடக்கு வாக்கு வங்கியில் கணிசமான வாக்குப் பிரிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

இது தவிர யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் 23 அரசியல் கட்சிகளும், 21 சுயேட்சைக் கட்சிகளும் வன்னித் தேர்தல் தொகுதியில் 22 அரசியல் கட்சிகளும் 25 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இவை வரலாற்றில் இல்லாத அளவு அதிகரித்துள்ளன என்பதை எவ்வாறாண கண்ணோட்டத்துடன் தமிழினம் பார்க்கப் போகின்றது என்பதை தேர்தலின் முடிவுகளே கற்றுத் தரப் போகின்றன.

தமிழினத்தின் ஒற்றுமை என்பது மிகக் கட்டமைப்பு மிக்கதான ஒன்றாகவும் உணர்வுபூர்வமானதாகவும் காணப்பட்ட நிலையில் தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைத்து அவர்களின் பலத்தை உடைத்தால் அது சர்வதேச அரங்கில் பெரும் தாக்கத்தை எற்படுத்தும்.

அந்த மகா தவறை தற்போதைய தமிழரசுக் கட்சி போன்ற பெரிய கட்சிகள் செய்ய முனைந்துள்ளன.

இந்த முனைவு நிச்சயமாக தமிழர் பலத்தை ஆட்டம் காண வைக்கும் செயலாகவே அமையும்.

தமிழர் தம் ஒற்றுமையைக் குலைத்து அவர்கள் பலத்தை பலவீனப்படுத்திய மகா தவறை எவரும் செய்து விடக் கூடாது. அவ்வாறு செய்தால் காலத்திற்கும் அதை நினைத்து வருத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** ஆலடியில இருக்கிற வியளும் எலெக்சனில நிற்கிறியளோ.

**பண்டிதர்:-** கடவுளே! அதையேன் கேட்கிறியள். வேட்புமனுத் தாக்கல் செய்து முடியும் வரைக்கும் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் தேர்தலில நிற்கும் படி கேட்டபடி இருந்தினம்.

**மூப்பர்:-** அவையளுக்கு என்ன பண்டிதர் சொன்னனீங்கள்.

**பண்டிதர்:-** தொடுகிலும் வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டன். ஒரு காலத்தில நாங்கள் எப்படியெல்லாம் அரசியல் நடத்தினம்.

அந்தநேரத்தில தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், சுயாட்சிக் கழகம் என்பன தான் பிரதான தமிழ்க் கட்சிகள். தந்தை செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம், நவரட்ணம் ஆகியோர் அரசியல் கட்சிகளின் தலைவர்களாக இருந்தினம்.


தேர்தல் மேடைகளில் பேசுவதற்கு மிகப் பெரிய பிரச்சாரப் பீரங்கிகள் இருந்தினம்.

ஆனால் இப்ப எல்லாம் போய்ச்சுது.

அதிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு நேர்ந்த கதியை நினைக்கும் போது தான் இந்த உலகத்தில எதுவும் நடக்கும் என்பதை உணரமுடியுது.

**வாத்தியார்:-** தமிழரசுக் கட்சியில இருந்து சிலர் விலகிப் போனது ஒரு புத்திசாலித்தனமான விடயமல்ல.

**மூப்பர்:-** ஏன்? வாத்தியார் அப்படிச் சொல்லுறியள்.



## அரசியலில் நீங்கள் யாருக்காகவும் மற்றவர்களைப் பகைக்காதீர்கள்

**வாத்தியார்:-** கட்சியில இருந்து வெளியில போனால் அவ்வளவு தான். என்னைப் பொறுத்த வரை திராவிட முன்னேற்றக் கழகத்தில இருந்து பிரிந்து சென்ற எம்.ஜி. ஆரைத் தவிர மற்றெவரும் கட்சியை விட்டு வெளியேறி சாதனை படைத்ததாகச் சரித்திரம் இல்லை.

**விதானையார்:-** இது விடயத்தில சி.சிறிதரன் கட்சியைவிட்டு விலகாமல் அதில நிண்டு பிடித்தது கெட்டித்தனம் எண்டு தான் சொல்லுவன்.

**சிறாப்பர்:-** அது சரி வாத்தியார், ஏகப்பட்ட அரசியல் கட்சிகள், ஏகப்பட்ட சுயேட்சைக் குழுக்கள் தேர்தலில போட்டியிடுகிறபோது தமிழ் மக்களாகிய நாங்கள் ஆருக்கு வாக்களிக்கிறது.

**வாத்தியார்:-** எதுக்கும் நாங்கள் முதலில பொறுமையாக இருப்பம்.

அதிகளவானவர்கள் தேர்தலில போட்டியிடுவதால, ஓரளவான வாக்குகளைப் பெற்றுக் கொள்கிறவர்களுக்கு ஆசனம் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்குது.

என்ன இருந்தாலும் நாங்கள் ஆலடியில நிதானமாகக் கதைக்க வேணும்.

ஏனெண்டால் எங்கட கொள்கை நடுநிலை. இந்த மகுட வாசகத்தை நாங்கள் கடைப்பிடித்தால் அது போதும்.

**சாத்திரியார்:-** என்ன இருந்தாலும் ஆனந்த சங்கரி ஐயாவைப் பாராட்டத்தான் வேணும். 91 வயதிலும் தேர்தலில போட்டியிடுகின்ற அவரின் மனத் துணிவு சாதாரணமானதல்ல.

**கங்காணி:-** நீங்கள் இதைச் சொல்லுறியள், இலங்கையிலேயே எதிர்வரும் பொதுத் தேர்தலில போட்டியிடுகின்ற வயது கூடிய, மூத்த அரசியல் தலைவர் ஆனந்தசங்கரி எண்டு சொல்லப்படுகுது.

**மூப்பர்:-** தெரியாமல் தான் கேட்கிறன்.

வட மாகாணத்தில இவ்வளவு சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடுவதற்கு என்ன காரணம்.

**விதானையார்:-** மூப்பர், பொதுவில எல்லாரிட்டயும் அரசியல் அபிலாசைகள் இருக்கத்தான் செய்யுது.

அதைவிட அரசியல் கட்சிகளுக்குப் பின்னால் நிண்டு அரசியல் தலைவர்களுக்காக பாடுபட்டால், அடுத்த தேர்தல்களின் போது, தங்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கும் எண்ட எதிர்பார்ப்பு இருக்கும் தானே.

அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு அரசியல் கட்சிகள் நடந்து கொள்ளாத போது, சுயேட்சைக் குழுவாக அல்லது வேறு அரசியல் கட்சியில் சேர்ந்து தேர்தலில போட்டியிடுகிற விருப்பம் இருக்கத்தான் செய்யும்.

அதின்ர விளைவு தான் வட மாகாணத்தில அதிகளவு சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடுவதற்குக் காரணம்.

**சிறாப்பர்:-** விதானையார், அது மட்டுமல்ல பொதுவில எங்கட அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின்ர எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை.

இதனால் பொதுவாகத் தமிழ் மக்கள் வெறுப்புக் கொண்டிருக்கினம்.

அந்த வெறுப்பின் வெளிப்பாடாக மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற சிந்தனையின் அடிப்படையிலும் சுயேட்சைக் குழுக்களும் அரசியல் கட்சிகளில் இருந்து பிரிந்து புதுப்புது கூட்டமைப்புகளையும் ஆரம்பித்து தேர்தல் களத்தில் இறங்கியிருக்கினம்.

**வாத்தியார்:-** அரசியலில எதுவும் நடக்கலாம். நேற்று எதிரியாக இருந்தவர் நாளைக்கு நட்பாக மாறலாம்.

அதேபோல இன்று நட்பாக இருந்தவர் நாளை எதிரியாக மாறலாம்.


ஆகையால் அரசியலுக்காக நாங்கள் யாரையும் பகைத்து விடக் கூடாது.

ஏனென்றால், அவர்கள் அரசியல்வாதிகள். சூழ்நிலைக்கு ஏற்ப மாறுவினம். ஆகையால மற்றவர்களுக்காக நீங்கள் யாரையும் பகைத்து விடாதீர்கள்.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார்கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனிவரும் காலங்களில் உயிரியமல் விஞ்ஞான, பௌதீக விஞ்ஞான துறைகளுக்கு வேலை வாய்ப்பு அதிகம் இருக்குமாமே வியாசரே?



தமிழரசுக்கட்சி பிரிந்து போவதற்கு காரணம் என்ன வியாசரே?

**ரிதுஷ் — வதிரி**

**சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே என்பது பற்றி?**

எப்போதும் சிரிக்காமல் இருப்பதும் எந்த நேரமும் சிரித்துக் கொண்டே இருப்பதும் இரண்டும் மனநோய்க்கான அறிகுறியே.

**குமார் — யாழ்ப்பாணம்**

**தமிழரசுக்கட்சி பிரிந்து போவதற்கு காரணம் என்ன வியாசரே?**

ஒரு காட்டில் சிங்கம் ராஜாவாக இருந்தது. காட்டில் இருக்கும் ஏனைய விலங்குகளை எல்லாம் இணைத்து சுமுகமாக ஆட்சி நடத்தியது சிங்கம்.

அந்தச் சமயம் சிங்கத்தின் ஆட்சிக்குள் நரி ஒன்று வந்து சேர்ந்தது. நரி சிங்கத்தை தவிர்த்து மற்றைய மிருகங்களை தன் வசப்படுத்தி காட்டில் ராஜாவாகத் தான் வர சூழ்ச்சி செய்தது.

இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லிச் சொல்லி சிங்கத்தை ஏனைய மிருகங்கள் வெறுக்க வைத்து, தான் நினைத்ததை சாதிக்க முயற்சித்தது.

இறுதியில் அதில் வெற்றிகண்டு, காட்டையும் தன்னை நம்பிய மிருகங்களையும் அழித்து விட்டு தான் நினைத்ததை செய்து விட்டேன் என்ற பூரிப்பில் காட்டை விட்டு நாட்டிற்கு ஓடியதாம்.

**வேலன் — யாழ்ப்பாணம்**

**நுகர்வுப் பொருட்களில் தெய்வங்களின் படங்களை அச்சிடுவதற்கு தடை விதிக்க முடியுமா வியாசரே?**

புத்தரை பச்சை குத்தியிருந்தார் என்ற காரணத்திற்காக வெளிநாட்டு சுற்றுலாவாசி ஒருவர் விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டார்.

புத்தரின் உருவம் அச்சிட்ட சேலை அணிந்த பெண் ஒருவரை பௌத்த துறவி மற்றும் மக்கள் இணைந்து கண்டித்த செயல் நாட்டில் நடந்தது.

இதுபோல் ஒரு இறுக்கமான நிலை எமக்கும் தேவை. நல்லூர் உற்சவ காலத்தில் கடவுள் படங்களை அச்சிட்டு தமது நிறுவனங்களை விளம்பரப்படுத்தும் நிறுவனங்களுக்கு அவை அடுத்தவர் கால்களுக்குள் மிதிபடுகிறது என்பது தெரியாதா என்ன?

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தேவ சகாயன் — மல்லாகம்**

**சிலவற்றை மனம் ஏற்றுக் கொள்ளாத போது அவ்விடத்தை மூச்சுக் காற்று அடைத்துக் கொண்டு விடுகிறதே வியாசரே?**

யாருக்காவது எமது முகவரியைக் கூறும் போதும் எதற்காகவாவது எமது முகவரியை எழுதும் போதும் மனக் கண்ணில் அப்பா வந்து போவார்.

தந்தையை இழந்தவர்களுக்கு அதன் வலியும் வீரியமும் தெரியும்.

**விஜய் — உரும்பிராய்**

**தமிழரசுக் கட்சி தற்போது ஒருவருடைய தனிக் கட்சி போலாகி விட்டதே வியாசரே?**

இன்னும் பத்து வருடத்தில் முன்பொரு காலத்தில் தமிழரசுக் கட்சி என்ற கட்சி ஒன்று இருந்ததாக நம் பிள்ளைகள் பாடப் புத்தகத்தில் படிக்கும் நிலை வரும்.

அந்தளவிற்கு கட்சியை அறுத்துக் கழுவும் செயல் மிகத் தீவிரமாக நடக்கிறது.

தமிழினத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்றார் தந்தை செல்வா.

அல்ல, தமிழரசுக் கட்சியைத்தான் கடவுள் காப்பாற்ற வேண்டும்.

**யாழிசையன் — கிளிநொச்சி**

**கல்வியில் பலமுறை தோல்வியடைந்தாலும் முயற்சி செய்தால் முன்னேற்றம் அடையலாமா வியாசரே?**

வீட்டின் சுவரில் உணவுத் துணுக்கை பல எறும்புகள் ஒன்று சேர்ந்து கொண்டு செல்வதைத் கண்டிருப்பீர்கள்.

அந்த உணவுத் துணுக்கைப் பறித்து மீண்டும் இருந்த இடத்தில் வைத்துப் பார்த்ததுண்டா? அவ்வாறு செய்த பின்பும் எறும்புகள் சோர்ந்து போகாது முயற்சியைக் கைவிடாது. அடுத்த சில மணி நேரத்தில் அவை அதை தாம் கொண்டு செல்ல வேண்டிய இடத்திற்கு கொண்டு செல்ல முயற்சித்த வண்ணமே இருக்கும்.

நீங்கள் எத்தனை முறை தட்டி விட்டாலும் அவை தமது முயற்சியில் இருந்து பின் வாங்காது. இது போலத்தான் மனித வாழ்வும் முயற்சியே முன்னேற்றப்படி.

**தனி ஒருவன் — யாழ்.மாவட்டம்**

**இனிவரும் காலங்களில் உயிரியல் விஞ்ஞான, பௌதீக விஞ்ஞான துறைகளுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இருக்குமாமே வியாசரே?**

படிப்பு சார்ந்த துறையில் வேலைக்கு அமர்த்தும் சிஸ்ரம் அரச துறையில் இல்லாது போனது தான் வேதனை.

சித்திரமும் வடிவமைப்பும் துறையில் பட்டம் முடித்தவரை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் நடனத்தில் பட்டம் முடித்தவரை அரச திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராகவும் நியமிப்பது எந்தவகையில் துறை சார்ந்தது என்றே புரியவில்லை.

அரச வேலை, அதற்கு ஒரு பட்டம் தேவை. அது எதுவாக இருந்தாலென்ன என்ற நாசத்தை தூக்கி எறியும்வரை மீட்சி வராது.

**சுதன் — குப்பிளான்**


**ஐ.நா தீர்மானத்தை போரை நடத்திய அரசும் ஏற்கவில்லை. அதன் பின்னர் வந்த எந்த அரசுகளும் ஏற்கவில்லை. அப்போ என்ன தான் முடிவு வியாசரே?**

இந்த நாட்டின் ஆட்சியாளர்களின் பிரச்சினையே இது தான். இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளை கொன்றொழித்தவர்கள் சிங்களவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை பாதுகாக்கத் துடிப்பது ஒரு நாளும் அறமாகாது.

குற்றம் செய்தவர்களை காப்பாற்ற துடிப்பவர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் வலிகளையும் துன்பத்தையும் உணர்ந்து கொள்ளாதது தான் வேதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் வான் பாதுகாப்புக் கவசங்கள் எப்படிச் செயற்படுகின்றன?




பழங்காலப் போர்க்கருவிகளில் வாள் எப்படி முக்கியமான ஆயுதமோ, அதேபோலக் கேடயமும் அவசியமான போர்க்கருவி. எதிரிகளைத் தாக்கிக் கொள்வதற்கு வாள் உதவும் என்றால் எதிரிகளின் வாள் மற்றும் ஈட்டிகளின் கொலைத் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக்கொள்ள கேடயம் பயன்படும். போர்முறைகள் மாறிவிட்ட இந்தக் காலத்திலும் அடிப்படையான உத்திகள் மாறவில்லை. தாக்குவது போலவே தற்காப்பும் அடிப்படை உத்தி. பேரழிவு ஆயுதங்களாக ஏவுகணைகளை விதவிதமாக தீவிரவாதக் குழுக்கள்கூட பயன்படுத்தும் இன்றைய போர்களில் இந்த தற்காப்புக் கவசம் இன்னும் அவசியமாகிவிட்டது.

ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து தடுக்கும் வான் பாதுகாப்புக் கவசங்களை உருவாக்குவதில் உலகிலேயே முன்னோடியாக இஸ்ரேல் இருக்கிறது. சுற்றிலும் பகை நாடுகள். எங்கெங்கோ இருந்து தாக்கும் ஆயுதக்குழுக்கள் என்று எதிரிகளின் மத்தியிலேயே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் நாடு இஸ்ரேல். ஒருவேளை இந்தப் பாதுகாப்பு வளையங்கள் இல்லாமல் போயிருந்தால் அந்த நாடு பேரழிவைச் சந்தித்திருக்கும்.

### இஸ்ரேலின் வான் பாதுகாப்பு கவசங்கள்!

அயர்ன் டோம், டேவிட்ஸ் ஸ்லிங், ஆரோ 2, ஆரோ 3, அயர்ன் பீம்!

கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் மீது 180 பாலிஸ்டிக் ரக ஏவுகணைகளை வீசி இரான் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் உளவுப்படையான மொசாட் தலைமையகம், இஸ்ரேல் விமானப்படையின் நெவாடிம் விமான தளம், டெல் நாஃப் விமான தளம் ஆகியவையே இந்தத் தாக்குதலின் இலக்குகள். "ஈரான் வீசிய பெரும்பாலான ஏவுகணைகளை வானிலேயே இடைமறித்து அழித்துவிட்டோம்" என்று கூறுகிறது இஸ்ரேல். ஆனால், "எங்கள் தாக்குதல் 90% வெற்றி என்கிறது ஈரான். இதுவரை இஸ்ரேல் மீது இவ்வளவு பெரிய தாக்குதலை ஈரான் நடத்தியதில்லை. ஈரான் வீசிய ஏவுகணைகளில் பல இடைமறித்து அழிக்கப்பட்டாலும் சில ஏவுகணைகள் இஸ்ரேலில் தாக்கி சேதங்கள்ளை ஏற்படுத்தின.

ஏவுகணைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். சில ஏவுகணைகள் எல்லைக்கு அப்பாலிருந்து வரும் சில ஏவுகணைகள் தூர தேசத்திலிருந்து வீசப்படும் சில ஏவுகணைகள் பூமியின் வளிமண்டலத்தைத் தாண்டிச் சென்று பயணம் செய்து இலக்கை மீண்டும் உள்நுழைந்து வந்து இலக்கைத் தாக்கும். ஒவ்வொன்றையும் எதிர்கொள்ள அயர்ன் டோம், டேவிட்ஸ் ஸ்லிங், ஆரோ 2, ஆரோ 3 என்று பலவிதமான வான் பாதுகாப்புக் கவசங்களை வைத்திருக்கிறது இஸ்ரேல்.

### அமுலுக்கு வந்தது அயர்ன் டோம்! (Iron Dome)

இஸ்ரேலுக்கு பக்கத்தில் இருக்கும் எதிரிகள் நிறையப் பேர். காசா பகுதியிலிருந்து ஹமாஸ் அமைப்பினர் ஏவுகணைகள் வீசித் தாக்குவார்கள். பக்கத்து லெபனான் நாட்டிலிருந்தபடி இயங்கும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் நூற்றுக்கணக்கான ஏவுகணைகள் வீசுவார்கள். சில சமயங்களில் சிரியாவிலிருந்தும் எதிர்பாராத தாக்குதல்கள் நிகழும். இப்படி மிக அருகிலிருந்து வீசப்படும் ஏவுகணைகளை வானிலேயே வழிமறித்து செயலிழக்கச் செய்யும்விதமாக உருவாக்கப்பட்டதே அயர்ன் டோம்.

4 கி.மீ முதல் 70 கி.மீ வரையுள்ள தூரத்திலிருந்து இஸ்ரேலைக் குறிவைத்து ஏவப்படும் ஏவுகணைகள், குறுரக ஏவுகணைகள் போன்றவற்றை வீழ்த்துவதற்காக உருவாக்கப்பட்ட சிஷ்டம் இது. இஸ்ரேல் இதை தன் நாட்டின் பல இடங்களில் நிறுவியுள்ளது.

(அடுத்தவாரம் தொடரும்...)

"வெறுங்கை என்பது மூடத்தனம். விரல்கள் பத்தும் மூலதனம்" என்றான் நவீன யுகக் கவிஞன் ஒருவன். கைகளைக் கொண்டே கவினுறும் வாழ்க்கை வாழக் கைத்தொழில் கற்றுக் கொடுக்கிறது. இன்றைய யுகம் கணணி யுகம். உலகின் இயக்கங்கள் யாவும் மனிதனின் விரல் நுனி அசைவிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. மாற்றமுறும் உலக ஒழுங்கிற்கேற்ப நாமும் மாறவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். கைத்தொழிலாளர்கள் உலகின் வல்லமையாய் விளங்கும் இக் காலத்தில் கைத்தொழில் என்பது கற்றுக் கொள்ள வேண்டியதும் பெற்றுக் கொள்ள வேண்டியதும் ஒன்றாகும்.

நாம் கற்கும் கல்வி எம்மைத் தனித்து வசப்படுத்தவேண்டும். நாம் தனித்துவப்பட வேண்டுமானால், கற்ற கல்வியைக் கொண்டு தொழில்களை எளிமைப்படுத்த வேண்டும். அவ்வாறு எளிமைப்படுத்தும் போது கைத்தொழில் என்பது எம் வசமாகும். நம்பிக்கை நானிலத்தில் வளரும் எமது தேவைகளை நாமே நிறைவேற்றிக் கொள்ளலாம்.

நெசவுத் தொழில், கூடைபின்னுதல், மட்பாண்டங்கள் வனைதல், தையல் வேலை, மரத்தளபாடங்கள் செய்தல், வர்ணப்பூச்சு என நீண்டு கொண்டே போகிறது வாழும் வகைதரும் கைத்தொழில்கள்.

கைத்தொழில் என்பது பெரும் இயந்திரங்களைப் பயன்படுத்தி இயக்கப்படும் கடின தொழிலென நாம் பொருள் கொள்ளாது, எம்கைகளைக் கொண்டு ஆக்கப்படும் கலைத்துவம் எனப் பொருள் கொள்ளல் பொருத்தமானது. அதனால் தான் சூழலை மாசுபடுத்தாத தன்மை, நாம் கூறும் கைத்தொழிலுக்குரியது என்பது நிறுத்திட்டமான உண்மையாகும்.

இது மனித வருமானத்தைப் பெருக்கி வசதியளிக்கிறது. பொருளாதாரப் பயன்களைப் பெற்றுக்கொடுக்கிறது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றது.அந்நிய நாணயத்தை அள்ளித்தருகின்றது. சூழல் நேயத்தைக் காக்கின்றது எனப் பயன்களைப் பட்டியலிட்டுக் கொண்டேபோகலாம்.


இவற்றைக் கவனத்தில் கொண்டே கல்வித் துறையிலும் தொழிற்கல்வியின் முக்கியத்துவம் பேசப்படுகிறது. தொழிற்பாடங்கள் புகுத்தப்பட்டு அவற்றின் அவசியம் அறிவுறுத்தப்பட்டு மாணவர்கள் பாடசாலையைவிட்டு வெளியே செல்கையில் கையில் ஓர் தொழிலோடு சமூகத்தில் பிரவேசிக்க வேண்டும் என எல்லோரும் விரும்பும் ஒரு நிலை இன்று உருவாகியுள்ளது.

எமது நாட்டில் மட்டுமல்ல உலகமெல்லாம் வேலையில்லாத் திண்டாடம் பெருகியுள்ள இந்நிலையில் அத்திட்டத்தினை இல்லாதொழித்து வாழ்க்கையில் கொண்டாட்டத்தினை உண்டாக்கக் கூடிய அஸ்திரமாய்க் கைத்தொழில் விளங்குகின்றது. நாம் எல்லோரும் அரச வேலையொன்றே அவசியமானது எனும் எண்ணப்பாங்கை மாற்றிக் கைவசம் கைத்தொழில் ஒன்று இருக்கிறது எனும் கவலை ஒழிக்கும் நிலையை உருவாக்க வேண்டும்.

எம் மண்ணில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையான பொருளாதார நெருக்கடியைப் பொடிப்பொடியாக்கி நாம் மீண்டும் மிடுக்கோடு மீண்டெழ மகத்தான சக்தியாய்க் கைத்தொழில் விளங்கும் என்றால் அது மிகையில்லை. இன்றைய சூழலில் வெவ்வேறு தொழிலில் ஈடுபடுவோரும் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் மார்க்கமாகக் கைத்தொழில் காணப்படுகின்றது. வருமானத்துடன் சிலருக்குப் பொழுது போக்காகவும் மன அழுத்தத்தைக் குறைக்கும் மகாமருத்தாகவும் இத்துறை விங்குகின்றது. இதனால்தான் எட்டயபுர எமக்கனித்த முண்டாசுக் கவிஞன் பாரதி தன் புதிய ஆத்திசூடியில் "கைத்தொழில் போற்று" எனக் கவியுரைக்கின்றான். எனவே நாமும் கைத்தொழில் ஒன்றை கற்றுக் கொள்வோம்.கவினுறும் வாழ்க்கை பெற்றுக் கொள்வோம்.

**தி.சாந்தகுமார், ஆசிரியர்,**
**யா/வட்டு மத்திய கல்லூரி.**


## கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: உங்கள் விருப்பம்
பாடியவர்: எல்.ஆர்.அஞ்சலை,
கோவை சௌந்தரராஜன்
இசை: விஜயபாஸ்கர்



மஞ்சள் பூசி மஞ்சம் கொண்ட ராமா ராமா
மந்திரத்தை சொல்லி விடு ராமா ராமா
மயங்கிய சீதா வரவழைத்தாளா
மடியினில் உன்னை அனுமதித்தாளா

மஞ்சள் பூசி மஞ்சம் கொண்ட சீதா சீதா
மந்திரத்தை சொல்லி விடு சீதா சீதா....

மஞ்சள் பூசி மஞ்சம் கொண்ட ராமா ராமா
மந்திரத்தை சொல்லி விடு சீதா சீதா

தசரதன் மகன் நான் ஜனகனின் மகள் நீ
மாமனின் வீட்டில் இன்று விருந்துக்கு வந்தேன்
அதிசய வரவு ஆனந்த உறவு
அரண்மனை காவல்க்காரன் தூங்கிவிட்டானா
நாயகன் இங்கே காவலன் அங்கே
நல்ல நேரம் பூஜை செய்ய

மஞ்சள் பூசி மஞ்சம் கொண்ட ராமா ராமா
மந்திரத்தை சொல்லி விடு சீதா சீதா....

கோபுர கலசம் கோவிலின் அழகு
யாவையும் உந்தன் சொந்தம் அழகிய ராமா
மாலையும் இல்லை மணவறை இல்லை
மனதினில் சொந்தம் உண்டு அழகிய சீதா
நானொரு பாதி நீயொரு பாதி
நல்ல நேரம் பூஜை செய்ய

மஞ்சள் பூசி மஞ்சம் கொண்ட ராமா ராமா
மந்திரத்தை சொல்லி விடு சீதா சீதா....

நேரம் குறைவு நெருங்கட்டும் உறவு
ஆரத்தி கொண்டு வந்து தீபத்தைக் காட்டு
தழைத்தது நினைவு பலித்தது கனவு
தந்தைக்கு பக்தி என்னும் திரையினைப் போட்டு
இனி என்ன வேலை இணைத்தது சேலை
நல்ல நேரம் பூஜை செய்ய

மஞ்சள் பூசி மஞ்சம் கொண்ட ராமா ராமா
மந்திரத்தை சொல்லி விடு ராமா ராமா
மயங்கிய சீதா வரவழைத்தாளா..ஹா
மடியினில் உன்னை அனுமதித்தாளா...

மஞ்சள் பூசி மஞ்சம் கொண்ட சீதா சீதா
மந்திரத்தை சொல்லி விடு சீதா சீதா....

மஞ்சள் பூசி மஞ்சம் கொண்ட ராமா ராமா
மந்திரத்தை சொல்லி விடு சீதா சீதா...

# மகாலட்சுமி எங்கெல்லாம் வசிப்பாள்!

லட்சுமி கடாட்சத்தை விரும்பாத அன்பர்கள் உண்டா என்ன? தூய்மையும் பக்தியும் நிறைந்த உள்ளத்திலும் இல்லத்திலும் மகாலட்சுமி நிரந்தரமாக வசிப்பாள் என்கின்றன ஞானநூல்கள். அந்த அலைமகளை மகிழ்விக்கும் நம்முடைய வழிபாடுகளும் நியதிகளும் நம் இல்லத்தில் எப்போதும் செல்வகடாட்சம் நிறைந்திருக்க வழி செய்யும்.

வலம்புரிச் சங்குக்கு லட்சுமி வாசம் என்றொரு பெயர் உண்டு. பொன், வெள்ளி அல்லது பித்தளையால் செய்யப்பட்ட ஆமைவடிவ பீடத்தில் வலம்புரிச் சங்கினை வைத்து அதனுள் லட்சுமி வடிவம் பொறித்த காசுகளை இட்டுவைத்தால் வீட்டில் செல்வகடாட்சம் நிறைந்திருக்கும்.

இனிப்புப் பொருள்கள் மகாலட்சுமிக்கு உவப்பானவை. லட்டு முதலான இனிப்புப் பட்சணங்களை



லட்சுமிதேவிக்குப் படைத்து ஏழைக் குழந்தைகளுக்கு விநியோகித்தால், வறுமைச் சூழல் நீங்கும்.

தாமரை மலர்கள் நிறைந்த குளங்கள் மகாலட்சுமி அம்சமாகும். இந்தத் தாமரைக் குளங்களில் வசிக்கும் மீன்களுக்கு பொரி, அவல் ஆகியவற்றை இட, லட்சுமிகடாட்சம் உண்டாகும்.

# தொழிலாளிகளின் முதலாளி
# ரதன் டாடா இயற்கை எய்தினார்

தொழிலாளிகளின் முதலாளி என தொழில்துறைகளில் சிலரைக் குறிப்பிடுவார்கள். அதில் முதல் முக்கியமான இடத்தை ரத்தன் டாடாவுக்கு வழங்கி அழகு பார்த்தனர் தொழிற் துறை ஆளுமைகள். தொழிலாளிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல ஆக்கப்பூர்வமான விடயங்களை இவர் டாடா குழுமத்தின் தலைமை பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு செய்திருக்கிறார். இந்த மனிதநேயவாதி தற்போது மாய்ந்திருக்கிறார்.

மும்பையில் 1937ஆம் ஆண்டு பிறந்த இவர் 10 வயதிலேயே குடும்பத்தில் பல கடினமான சூழல்களை சந்தித்திருக்கிறார். ஆம் இவருக்கு 10 வயது இருக்கும் போதே இவரின் தந்தையாரும் தாயாரும் விவாகரத்து பெற்று பிரிந்துவிட்டனர். பிறகு, பாட்டியின் அரவணைப்பில்தான் ரத்தன் டாடா வளர்ந்திருக்கிறார். கார்னல் பல்கலைகழகத்தில் இளங்கலை படிப்பை முடித்ததும் இவருக்கு ஐ.பி.எம் நிறுவனத்தில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஆனால் ரத்தன் டாடாவின் கவனம் தன்னுடைய குடும்ப நிறுவனத்தில்தான் இருந்திருக்கிறது. அதன் பிறகு கல்லூரி படிப்பையெல்லாம் முடித்துவிட்டு தன்னுடைய குடும்ப நிறுவனமான டாடாவிலேயே தனது பணியைத் தொடங்கினார்.


**Ratan tata`Born in silver spoon'** என்ற வாக்கியம் பலரும் கேள்விப்பட்டிருப்பார்கள். அதாவது பெரிய பணக்காரர்களின் குடும்பத்தில் பிறந்து அந்த ஆடம்பர வாழ்க்கையிலேயே வாழ்பவர்களை இந்த வாக்கியத்தைக் கொண்டு குறிப்பிடுவார்கள். ரத்தன் டாடா நினைத்திருந்தால் அவரும் இப்படியான சூழலிலேயே தனது பணியைத் தொடங்கியிருக்கலாம். ஆனால் டாடா ஸ்டீல் நிறுவனத்தில் வெடிப்பு உலை மற்றும் சுண்ணாம்புக்கல் கலவையை மேற்பார்வையிடும் வேலையைத்தான் முதலில் முழுமையாகக் கவனித்து வந்திருக்கிறார். இந்த பணியின் மூலமாக 1962 ஆம் ஆண்டு டாடா குழுமத்திற்குள் வந்தார். ஜே.ஆர்.டி டாடாவுக்கு பிறகு 1991ஆம் ஆண்டு டாடா குழுமத்தின் சேர்மேன் பதவியில் அமர்ந்தார்.

1991 முதல் 2012 வரை டாடா குழுமத்தின் சேர்மேனாக இருந்திருக்கிறார். இவர் இந்த பதவியில் இருக்கும்போது டாடா குழுமத்தின் லாபம் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. கிட்டத்தட்ட ரத்தன் டாடா தலைமையில் குழுமத்தின் வருவாய் 40 மடங்கு உயர்ந்திருக்கிறதாம். ஹெட்லி - டாடா டீ, டாடா மோட்டார்ஸ் - லேண்ட் ரோவர் ஜாகுவார், டாடா ஸ்டீல் - கோரஸ் போன்ற முக்கியமான இணைப்பு நிறுவனங்கள் இவர் தலைமையில் இருக்கும்போதுதான் உருவாகின. நடுத்தர குடும்பங்களுக்காக 1 லட்ச ரூபாய்க்குள் கார் டிசைன் செய்ய வேண்டும் என இவர் கனவுடன் திட்டமிட்டிருக்கிறார். திட்டமிட்டபடி ரத்தன் டாடாவின் கனவு ஹடாடா நானோ கார் மூலம் நனவாகியிருக்கிறது. இப்படி பல விடயங்களை இவர் டாடா குழுமத்தின் தலைமையில் இருக்கும்போது சாத்தியப்படுத்தினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றத்தால் மகிழ்ந்திரு



அலைகடல் முழுதும் அலைந்திடும் துயரம்
உணர்த்திடும் வடுவாய் எம் தமிழ் மனதில்

ஆண்டுகள் தோறும் நம்பிய தலைகள்
மறைந்திடும் வேளை நெருங்குது இன்று

கனவுகள் தொலைத்த காவியம் யாவும்
விதையாய் மண்ணில் வளர்ந்திட என்றும்

நிகழ்த்திய நிகழ்வுகள் நிழலாய் தெரியும்
மறைத்ததை மீண்டும் துடைத்திடும் பொழுது


தெருவினுள் நிறைந்த ரதங்களின் நெரிசல்
குறைந்தது இன்று மலர்ந்திடும் நாட்டில்

திரையினுள் மறைந்த பெரியவர் யாவும்
தெரிந்தனர் இன்று திரையினை விலக்க

விலைகளின் வீழ்ச்சி விருந்தாய் நிறைந்திட
மீண்டிடும் இலங்கை மிடுக்குடன் சிலிர்க்குது.

ந.விதுஷன், கற்கோவளம்.

## தேர்தல் பவனி




தேர்தல் களமிது
தெரியாத புதிரிது!
பார்த்த இடமெல்லாம்
போஸ்ரர்கள் மின்னுது!
குடுமி ஆட்டிவிட
குரங்குகள் பாய்வது போல்,
மொட்டந் தலைக்கும்
முழந்தாளிற்கும்
முடிச்சுப்போட்டு
அதை, அவிழ்க்கும்
வித்தை கற்றவர்கள்
கட்டுகிறார்; அவிழ்க்கிறார்;
கதைபல பேசி கருமம் முடிக்கிறார்!

வித்தைகாட்டும்
மந்திக் கூட்டம்போல்
வீம்புக் கதைகள் பேசி
சிரிப்பூட்டுகிறார்...

சொத்தைப்பல்லாய்
கட்சி அழிந்துபோக
தம் வெற்றிக்காய்
தனிக் கூட்டம் பிடிக்கிறார்!
தவளைக் கூட்டமாய்க் கத்துகிறார்...

நாற்றம் எடுக்கும் சாக்கடையாய்
நாலாபுறமும் காளான்கள்!
அட, மழையே பெய்யவில்லை
எப்படி முழைத்தார்களோ?

இடுங்கள் புள்ளடியை
எமக்கென்று,
இசைக்கிறார் கச்சேரி!
விடுங்கள் ஆளை என்று
ஓடுகிறார் மக்கள் இவர் நச்சரிப்பில்

களம் பல கண்ட சிங்கங்கள்... புலிகள்...
சிறுத்தைகள்... நரிகள்....
சில்வண்டுகள்... மண்ணுண்ணிகள்...

அட நாசமிது...
அடித்து மூடடி படலையை
எடுத்து வையடி தும்புத்தடியை...
அயல்வீட்டு ஐயாவின்
அதட்டல் ஒலி
அடடா, இம்முறை
பலருக்கு இருக்கிறது ஆப்பு
என்பது புரிந்து போச்சு...

மாவை நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்-734



## விதியாகும் வீதி?

அளவிற்கு மிஞ்சினால்
அமிர்தமும் நஞ்சாகும்
எல்லாச் செயல்களுக்கும்
இது பொருத்தமே! உன் போன்றோரின்
வீதி உலா வருகையினால்,
பாதசாரிகளுக்கும் பாதிப்பு வந்திடுமே.

துணவியூர், நடா.

## மௌனத்தின் தேடல்- 735



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

## சாகசம்

நெஞ்சில் துணிவிருந்தால்
நிலவுக்குப் போய் வரலாம்
சாகச வித்தையறிந்தால்
மோட்டார் சைக்கிளில் ஏழு
பேர் பூமியைச் சுற்றி
வலம் வரலாம் இது என்ன
துணிவோ சாகச வித்தையோ
ஒன்றுமே விளங்கல்லே
ஒன்றுமே புரியல்லே
இவ் உலகத்திலே

சி.மகாலட்சுமி,கொக்குவில்.

## பார்வையும் பாதையும்

நிறை குடம் போன்று தளம்பாமல்
தலைக் கவசங்களையும் அணியாமல்
சுறு சுறுப்பும் சிறிதும் குறையாமல்
சுற்றுலா செல்லும் வரிசையாயினும்
முன்னால் வருவதைக் கண்கள் பார்க்கும்
பின்னால் வருவதைக் கண்ணாடி காட்டும்
இதைக் கவனிக்காமல் விட்டு விட்டு
புகைப்படத்தில் முகம் பதிக்கு மாசையால்
ஒரு பக்கம் மட்டும் பார்வை செல்வது
பெரும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடும்
இந்த நிலை அரசியலில் நீடித்தால்
எந்த நாளும் விரும்பும் அமைதி வராது

க.நாகராசா, நுணாவில்.

## ஆபத்து பேராபத்து

ஒரு வாகனம் ஏழு பயணிகளா?
பாலகரையும் மாணவரையும் ஏற்றிச்
செல்லும் அண்ணரே!
உமக்கு மதி கெட்டுப் போனதா?
தலைக்கவசம்
அணியாத தம்பிகளா சட்டம்
புரியவில்லையா? வாகனப்
போக்குவரத்து இல்லாத காரணமா?
ஏனைய பெற்றோர்கள் அக்கறை
யீனமா? எதுவானாலும் சரி
பிள்ளைகளே! வாகனத்தைவிட்டு
இறங்குங்கள்.
ஆபத்துக்களை விலக்கி
தவறிக் கொள்ளுங்கள்.

அபிகுலமாலிகா, சித்தன்கேணி.

## விபரீத முடிவு

வீதிவிதிகளை மதிக்காதவர் வாகனங்களில் மிதிபடுவார்
என்பதை உணராமல் சிறுவர்களை ஏற்றி
சுற்றித்திரியும் நண்பா ஏன் இந்த விசப் பரீட்சை
உணர்ந்து கொள்ளுங்கள் பிள்ளைகளுக்கு விதிகளை
உணர்த்தி நில்லுங்கள் இல்லையேல், விபரீதமாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




### ஆங்கிலேயர் ஆட்சி

ஆங்கிலேயக் கேர்னல் பீற்றர் றெயினர்ஸ் ஸ்ரூவார்ட் தலைமையில் கப்பற் படைத் திரளொன்று பருத்தித்துறையில் இறங்கியது. வெகு இலகுவாக திருகோணமலை பிரடெரிக் கோட்டையையும், மட்டக்களப்புக் கோட்டையையும் கைப்பற்றிக் கொண்ட மகிழ்வோடும், ஆணவத்தோடும் ஸ்ரூவார்ட்டின் படை பருத்தித்துறையிலிறங்கி அணிவகுத்து யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி முன்னேறியது. 28.செப்ரெம்பர் 1795 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணக் கோட்டை ஆங்கிலேயப் படையால் முற்று கையிடப்பட்டது. கேர்னல் ஸ்ரூவார்ட், கோட்டைக்குள் இருப்போரைச் சரணடையுமாறு செய்தி அனுப்பினான்.

ஒல்லாந்த கம்மாந்தராக அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த கம்மாந்தர் றாசெட் (Raket) என்பவனால் எதுவும் செய்ய முடியவில்லை. சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை. கிழக்குக் கரையோரக் கோட்டைகள் அனைத்தும் ஆங்கிலேயரிடம் சரணடைந்த நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றுவதென்பது பயனற்றதென றாகெட் எண்ணினான் கோட்டைக்குள் இருந்த 39 ஒல்லாந்தரும் 98 இந்தியச் சிப்பாய்களும் (Sepays) வெள்ளைக் கொடி ஏந்தி வெளி வந்து சரணடைந்தனர்.

அவர்கள் வரிசையாக வெளிவந்தனர். வெளியில் வரும் போது கம்மாந்தர் றாகெட்டிற்கு, அவனது முன்னோன் கொமுசாறி வன் ஹூன்ஸ், சரணடைந்த போர்த்துக்கேயருக்குச் செய்த நடத்தைகள் நினைவு வந்திருக்கும். அனைத்துச் சொத்துக்களையும் பறிமுதல் செய்து, முழு நிர்வாணமாக்கிப் பரிசோதித்து. போர்த்துக்கேயரை வன் ஹூன்ஸ் கப்பலேற்றி அனுப்பி வைத்தான்.

ஆங்கிலேயர் அவ்வாறு செய்யவில்லை. ஒல்லாந்தர் தமது ஆயுதங்களை ஸ்ரூவார்ட் முன் குவித்தனர். ஒல்லாந்த உயர் இராணுவ அதிகாரிகள் மட்டும் தம் அரை வாள்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்களது தனிப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்ல ஸ்ரூவார்ட் அனுமதித்தான்.

ஆனால் பொதுச் சொத்துக்கள், துப்பாக்கிகள். களஞ்சியப் பொருட்கள், காகிதங்கள் என்பவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை. சரணடைந்த ஒல்லாந்தர் தம்மைக் கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு கோரியபோதிலும். கேர்னல் ஸ்ரூவார்ட் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களை யுத்தக் கைதிகளாக இந்தியாவிற்கு அனுப்பி வைத்தான்.

(தொடரும்...)




# கடல் புறா

# எட்டாக் கனியும் கிட்டாக் கனியும்

ஆனால் பதிலின் வேகம் சொல்ல முடியாததாயிருந்தது. அதைக் கேட்டுப் பெரும் அதிர்ச்சியடைந்தான் கண்டியத் தேவன்.

அந்தப் பதிலைத் தொடர்ந்து இளையபல்லவன் கூறிய வார்த்தைகள் அந்த அதிர்ச்சியை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தின.

ஏதோ பெரும் விபரீதத்துக்கு அக்ஷய முனையில் அஸ்திவாரம் போடப்படுகின்றது என்பதை மட்டும் தேவன் புரிந்து கொண்டான். அளவிட முடியாத ஆபத்தும், திகிலை விளைவிக்கும் முடிவுகளும் அந்தத் துறை முகத்தில் ஏற்படும் காலம் அதிகத் தூரத்திலில்லை என்பது கண்டியத்தேவனுக்கு நன்றாகத் தெரிந்தது.

### எட்டாக் கனியும் கிட்டாக் கனியும்

கடற்கரையில் அந்தக் காலை நேரத்தில் கப்பலருகே நின்ற கருண்ணாகர பல்லவன் தனது கேள்விக்கு விடுத்த கருத்தை உலுக்கும் பதிலைக் கேட்டதும் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளான கண்டியத்தேவன் கவலையும் பிரமையும் நிரம்பிய கண்களைப் படைத்தலைவன் மீது நாட்டினான்.

மேன்மேலும் ஏதேதோ கேள்விகளை உதிர்க்கக் கண்டியத் தேவன் நா துடித்ததானாலும் படைத்தலைவன் முகத்திலிருந்த ஆழ்ந்த யோசனையின் விளைவாக அந்தக் கேள்விகள் நாவிலேயே உறைந்து விட்டன. முதல் நாளிரவு தான் கோட்டையில் பலவர்மன் மாளிகையில் பார்த்த இளைய பல்லவனுக்கும், அன்று காலையில் கடற்கரைக்கு வந்துள்ள படைத் தலைவனுக்கும் பெருத்த வித்தியாச மிருக்கவே கண்டியத்தேவன் கவனித்தான்.

முதல்நாள் இரவு மது வெறியிலிருந்த இளையபல்லவனுக்கும் அன்று காலை மிகத் தெளிவான புத்தியுடன் வந்திருக்கும் படைத் தலைவனுக்கும் பார்வையிலும் பேச்சிலும் வித்தியாசமிருக்கவே செய்ததானாலும், அந்த வித்தியாசமெதுவும் முதல் நாளிரவு குடி வெறியில் இட்ட உத்தரவை மாற்றும் நிலையில் இல்லாததைக் கவனித்த கண்டியத்தேவன் மேலும் மேலும் பிரமிப்புக்கே உள்ளானான்.

மரக்கலத்தை மாற்றியமைக்க மாதம் ஒன்று பிடிக்கும் எனத் தான் கூறியதும், ஆகலாம். ஆகட்டும். ஒரு மாதம் அவகாசம்தான் உமக்குக் கொடுக்க முடியும் என்று படைத்தலைவன் பதிலிறுத்ததிலிருந்து மரக்கலத்தை மாற்றியமைக்கும் திட்டத்தை அவன் மாற்றப் போவதில்லை.

என்பதைப் புரிந்துகொண்ட கண்டியத்தேவன், "அதற்குப் பின்?" என்று ஒரு கேள்வியையும் போட்டு வைத்தான்.

எந்தத் தாமதமுமில்லாமல் சட்டென்று வந்தது படைத்தலைவன் பதில். "அதற்குப் பின் நாம் இங்கு இருக்க மாட்டோம்." என்றான் இளையபல்லவன் திடீரென்று. அந்தப் பதில் வீசின குரலில் மிகுந்த வேகமிருந்ததையும் பெரும் பொருளும் புதைந்து கிடந்ததையும் கண்டியத் தேவன் கவனித்தான். இருப்பினும் திடீரென்று கிடைத்த அந்தப் பதிலே அவனைப் பெரும் திகைப்புக்குள்ளாக்கியது. அந்தத் திகைப்புடன், "அப்படியானால் அப்படியானால்.." என்று தட்டுத் தடுமாறி இழுத்தான் கண்டியத் தேவன்.

இங்கிருந்து போய்விடுவோம். தொலைதூரம் போய் விடுவோம், என்ற இளையபல்லவன் பதில் முன்னைப் போலவே துரிதமாக வெளிவந்தது. "எங்கு போகப்போகிறோம் படைத்தலைவரே? கண்டியத் தேவன் கேள்வி கலக்கத்துடன் ஒலித்தது.

அதைப் பிறகு சொல்கிறேன். ஆனால் ஒரு மாதத்திற்குமேல் இந்தத் துறைமுகத்தில் நமக்கு வேலையில்லை. என்றான் இளைய பல்லவன். இந்தத் துறைமுகத்தில் தங்கப் போவதாகச் சொன்னீர்களே? ஆம், சொன்னேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

420

வலம்புரியின் மருத்துவச்சுடர்


## மருந்துகளை ஒழுங்காக பாவிக்கத் தவறினால்...

இங்கு நாம், மருந்துகளை வைத்தியர்கள் பரிந்துரைத்தபடி ஒழுங்காக, கிரமமாக எடுக்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றிப் பார்ப்போம். எமக்கு ஏதாவது ஒரு நோய் நிலை ஏற்படும் போது, நாம் வைத்தியரை நாடி, அவர்கள் ஆலோசனைப்படி மருந்துகளை எடுப்பது வழமை ஆகும். ஆனால், எங்களில் எத்தனை பேர் வைத்திய ஆலோசனைப்படி முழுமையாக, சரியாக மருந்துகளை உட்கொள்கிறோம் என்பது ஒரு கேள்விக்குறி ஆகும்.

கசப்பான உண்மை என்னவென்றால், குறுகிய கால நோய்க்கான மருந்துகளையோ அல்லது நீண்ட கால நோய்க்கான மருந்துகளையோ எங்களில் அநேகமானோர், வைத்திய ஆலோசனைப்படி முழுமையாக மருந்துகளை பாவிப்பதில்லை. ஏன் நாங்கள் வைத்தியர்கள் கூறியபடி மருந்துகளை ஒழுங்காக எடுக்க வேண்டும்? ... அவ்வாறு செய்தால் தான், எமக்கு இருக்கும் நோய்களிலிருந்து முழுமையாக குணமடைய முடியும் அல்லது நோய்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும்.

அவ்வாறு இல்லையென்றால், நோய்கள் தீவிரமடைந்து, உயிருக்கு ஆபத்தாக அமையலாம் அல்லது நீண்ட காலத்திற்கு எம்மை படுக்கையில் தள்ளலாம். இதனால், எமது வருமானம், குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை என்பன பாதிக்கப்படலாம்.

இதற்கு சில உதாரணங்களைப் பார்ப்போம். நாம் வைத்தியசாலைக்கு குறுகிய கால நோய்க்கான அல்லது நீண்ட கால நாட்பட்ட நோய்க்கான சிகிச்சைக்காக செல்லலாம். குறுகிய கால நோய்களில் ஒன்றான உண்ணிக்காய்ச்சல், தற்போது அதிகமாகப் பரவி வரும் நோய் ஆகும். ஒருவர் உண்ணிக்காய்ச்சலோடு வைத்தியசாலைக்குச் செல்லும் போது, அவரின் நோய் நிலையை ஆராய்ந்து, அதற்கான மருந்துகளை வைத்தியர்கள் பரிந்துரைப்பார்கள். அந்த மருந்துகளை அவர்கள் சரியாக, கிரமமாக எடுக்கும் போது, நோயின் தீவிரம் படிப்படியாக குறைவடைந்து அவர்கள் சிறிது நாட்களில் பூரணமாக குணமடைவார்கள். ஆனால், எம்மில் பலர், நோயின் தீவிரம் குறைவடைந்தவுடன், நோய் முழுமையாக குணமடைந்து விட்டதாக எண்ணுவார்கள். ஆகையால், தொடர்ச்சியாக மருந்துகளை எடுப்பதில்லை. இது மிகவும் ஆபத்தானது. ஏனெனில்,



உண்ணிக்காய்ச்சலிற்குரிய மருந்துகள் ஆரம்பிக்கப்படும் போது, சில நாட்களின் பின்னர், உண்ணிக்காய்ச்சலை ஏற்படுத்தும் கிருமி மந்தமான நிலையில் வீரியம் குறைந்து காணப்படும்.

அதற்கான மருந்துகளை தொடர்ச்சியாக, முழுமையாக எடுக்கும் போது மட்டுமே அந்த கிருமி உடலில் இருந்து முற்றாக அகற்றப்படும். அவ்வாறு இல்லாமல், மருந்துகளை அரைகுறையாக நிறுத்தும் போது, உண்ணிக்காய்ச்சலை ஏற்படுத்தும் கிருமி மீண்டும் உயிர்ப்பு பெற்று மிகுந்த வீரியத்துடன் நோயாளியைத் தாக்கும். இது நோயாளியின் உடல் நிலையை மிகவும் மோசமடையச் செய்து, மிகுந்த ஆபத்தை அவருக்கு ஏற்படுத்தும்.

சிலவேளைகளில், நோயாளியின் முக்கிய அங்கங்களான நுரையீரல், இதயம், மூளை, சிறுநீரகம் போன்றவற்றை அதிகமாக பாதிப்பதால், நோயாளி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலைமையும் உருவாகலாம். அதோடு நாம் அரைகுறையாக இந்த மருந்துகளை எடுப்பதால், கிருமிகள் மருந்துகளிற்கு எதிரான எதிர்ப்புச் சக்தியை உருவாக்கிக் கொள்ளும். எனவே, மீண்டும் அவருக்கு அந்த நோய் ஏற்படும் போது, வழமையாக கொடுக்கப்படும் மருந்துகளால் நோயாளிக்கு எந்த பயனுள்ள விளைவும் ஏற்படாது. இதனால், அவர்களுக்கு மிகவும் சக்தி வாய்ந்த வேறு மருந்துகளை கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதோடு, வைத்தியசாலையில் நீண்ட நாட்களுக்கு தங்கியிருக்க வேண்டிய நிலையும் ஏற்படும். இது நோயாளியின் குடும்ப, சமூக, பொருளாதார விடயங்களில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதேபோல் நாட்பட்ட நோய்களான நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், ஆஸ்துமா, வலிப்பு போன்ற நோய்களுக்கு, பெரும்பாலும் நாம் நீண்ட காலத்திற்கு மருந்துகளை எடுக்க வேண்டி இருக்கும். இந்த நோய்களை பெரும்பாலும் குணப்படுத்த முடியாது. ஆனால் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும். எனவே இதற்கு மருந்துகளை, வைத்தியர்கள் கூறியபடி ஒழுங்காக எடுக்க வேண்டியது அவசியமாகும். நோய் கட்டுப்பாட்டிற்குள் வந்தால், அது பூரணமாக குணமடைந்து விட்டது என அர்த்தம் இல்லை. உதாரணமாக, உயர் குருதி அமுக்கத்திற்கு மருந்துகளை எடுத்து, குருதி அமுக்கம் சாதாரண நிலைக்கு வந்த உடன், நோய் குணமாகி விட்டதாக சிலர் எண்ணுவதோடு, அதன் பின்னர் மருந்துகளை எடுக்காமல், குருதி அமுக்க அளவை பரிசோதித்துப் பார்க்காமல் கவனமின்றி இருப்பார்கள். இது அவர்களுக்கு ஆபத்தாக முடியும். அவர்களது குருதி அமுக்கம் தொடர்ச்சியாக அதிகமாக காணப்படும் போது, அவர்களுக்கு மாரடைப்பு, பாரிசவாதம், சிறுநீரக செயலிழப்பு மற்றும் உயிரிழப்பும் ஏற்படலாம். எனவே, நாட்பட்ட நோய்கள் உள்ளவர்கள் வைத்திய ஆலோசனைப்படி தொடர்ச்சியாக மருந்துகளை எடுக்க வேண்டும்.

ஏன் நோயாளிகள் ஒழுங்காக மருந்துகளை எடுப்பதில்லை?... அதற்கான காரணங்கள் என்னவென்று பார்த்தால் முதலாவது, நோயாளிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், அவருக்கு இருக்கும் நோய்களைப் பற்றிய தெளிவான அறிவு இல்லாமையே இதற்கு மிக முக்கிய காரணமாகும். பெரும்பாலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் வைத்தியசாலையை விட்டு வெளியேறும் போது, அவர்களது நோய் நிலை பற்றியும், பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை எவ்வாறு எடுக்க வேண்டும் என்பது பற்றியும் வைத்தியர்கள் அவருக்கு அறிவுறுத்துவது வழமையான ஒரு விடயம். ஆனால், நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் வைத்திய ஆலோசனைகளை அலட்சியம் செய்வது மிகவும் அதிகமாக காணப்படுகின்றது. இதற்கு எமது சமூக, கலாசார காரணிகளும் பங்காற்றுகின்றன. உதாரணமாக, எமக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டு வைத்தியர்களின் பரிந்துரைப்படி மருந்துகளை பெற்று, வீடு திரும்பும் போது, எமது வீட்டில் உள்ளவர்கள் தங்களுக்கு தெரிந்த நாட்டு வைத்திய முறைகளைக் கூறி, அவற்றை மட்டும் நோயாளிகள் பின்பற்றி, வைத்தியர்கள் பரிந்துரைத்த மருந்துகளை உட்கொள்ளாமல் விடுவதால் அவர்களின் நோய் நிலை தீவிரமடைகிறது.


Dr. சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## அழியும் இன்பங்களில் அமிழ்ந்து அழிந்து விடாதிருப்போம்.



பைபிளின் நற்செய்தியில் மாற்கு 10:17-30 பகுதி இன்று தரப்படுகின்றது. "நல்ல போதகரே, நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்ட ஒருவரின் கேள்வியுடன் பைபிள்ப் பகுதி தொடங்குகிறது.

அதற்கு இயேசு உமக்குக் கட்டளைகள் தெரியும் அல்லவா? அதன்படி நடவும் என்கிறார். இவ்வாறு கேள்விகளாகவும் பதில்களாகவும் இன்றைய நற்செய்தி இறைவார்த்தை தொடர்கின்றது. அதற்கு அவர் இயேசுவிடம் இவை அனைத்தையும் நான் என் இளமையிலிருந்தே கடைப்பிடித்து வந்துள்ளேன் என்றார்.

அப்போது இயேசு அன்பொழுக அவரைக் கூர்ந்து நோக்கி, உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும். என்று அவரிடம் கூறினார். இயேசு சொன்னதைக் கேட்டதும் அவர் முகம்வாடி வருத்தத்தோடு சென்று விட்டார்.

ஒவ்வொருவரையும்போலவே இந்த மனிதரும் ஒரு பக்கம் நிலைவாழ்வின் முழுமை நோக்கிக் கவரப்பட்டார். மறுபக்கம், தனது செல்வத்தைச் சார்ந்து வாழ்ந்தார். கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன்மூலம் நிலைவாழ்வை வாங்கிக்கொள்ளலாம் என்று நினைத்தார்.

எனவேதான் தனக்கு உள்ளவற்றையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டுத் தன்னைப் பின்செல்லுமாறு இயேசு சொன்னபோது அதைப் புறக்கணித்தார். உண்மையும், எதார்த்தமும் தெளிவாகத் தெரிந்தாலும் அவற்றைக் காண்பதற்குப் பதில், நம்மைக் காத்துக் கொள்வதற்குச் சாதகமான வழிகளில் சிந்திக்கவே நாம் முயல்கிறோம்.

கேள்விவடிவிலோ, அல்லது வேறு வடிவங்களிலோ இறைவார்த்தைகள் நம்மை வந்தடையும் போது,அதில் பொதிந்துள்ள உண்மைகள், நம்மைச் சங்கடத்திற்கு உள்ளாக்குவதால், அவற்றை விட்டு விலக நாம் முயற்சிகள் எடுக்கிறோம். கடவுளின் வார்த்தைகள் கண்ணுக்கு எட்டாத தூரத்திலிருப்பதாக நாமே கற்பனை செய்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறோம்.

இதற்கு நேர்மாறாக, கடவுளின் கட்டளை என்ற உண்மை எப்போதும் எம் கண்முன்னே உள்ளது. அதைத் தேடி அலைய தேவையில்லை. இறைவனுக் கெதிரான எந்த மகிழ்ச்சியும் மகிழ்ச்சியன்று. மறுகணமே மறையக் கூடியன.

அழிந்து போகும் உணவுக்கு ஒப்பானவை. அழியும் இன்பங்களில் அமிழ்ந்து அழிந்துவிடாது நாம் சாதுரியமாக இருக்கவேண்டும். நிலைவாழ்வை அடைவதற்கு செல்வங்கள், தடைகளை எம் முன்னே போடவிட்டாலும், மனித சமுதாயத்தின் உள்ளார்ந்த தேவைகளை நிறைவேற்றும் வழிகளில், செல்வம், செய்ய இயலாததை இயேசுவின் அன்பு செய்துவிடுகிறது.

நிறைய செல்வங்கள் வைத்திருக்கும் மனிதரின் இதயத்தைக் கடவுளால் வெல்ல முடியும்.இந்த இடத்தில் நாம் படித்த ஒரு கதையை பகிருவது சாலச் சிறந்தது.

சார்லஸ். டபிள்யு. கோல்சன் என்பவர் அமெரிக்கத் தலைவர் றிச்சாட் நிக்சனின் வெள்ளை மாளிகையில் முக்கியமான வேலை செய்தவர். அந்த மாளிகைக்கு அருகிலேயே அவரது மிகப்பெரிய வீடு. சொந்தமாக படகு, கார், பெருமளவு மாத வருமானம் மற்றும் நிறைந்த பணியாள்கள் என வசதியோடிருந்த ஒரு செல்வந்தர் அவர். ஆனால் அவர் நிம்மதியும் மகிழ்ச்சியும் இல்லாதிருந்தார்.

ஏதோ ஒன்று வாழ்க்கையில் இல்லாததால் வாழ்க்கையின் நிறைவு வெற்றிடமாகத் தெரிந்தது. அது என்ன வென்று அவருக்குத் தெரியவில்லை.

ஒரு நாள் நண்பர் ஒருவர் இயேசுவை நம்பி கடவுள் பற்றுமிக்கவராக மாறிய அவரது வரலாற்றை எடுத்துக் கூறினார். சார்லஸ் கோல்சன் அவருக்கு இருந்த அணையாத தாகம் கடவுள் இல்லாமையே என உணர்ந்தார். அன்றிரவே தனியாகச் செபிக்க ஆரம்பித்தார் சார்லஸ் கோல்சன். அவர் மனமாற்றம் பெற்றார். அவர் அமெரிக்க அதிபர் அலுவலகத்தில் பார்த்துக் கொண்டிருந்த முக்கியமான பணியை உதறிவிட்டு இயேசுவின் பக்தராக மாறினார்.

அமெரிக்கா முழுவதும் ஆச்சரியப்பட்டது. அமெரிக்காவின் செய்தி ஏடுகள் லாஸ் ஆஞ்சலஸ் டைம்ஸ், மற்றும் நியூயார்க் டைம்ஸ்; போன்றவை சார்லஸ் கோல்சன் மனம் மாறி கிறிஸ்துவின் சீடரானார் என அவரை வர்ணித்தன. நாமும் வாழ்க்கையில் நிறைவையும் நிம்மதியையும் மகிழ்ச்சியும் காண விரும்புகிறோம். எனவே இன்று இயேசு சொல்லுவதைக் கேட்போம். "நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்வோம்

ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

# 50 இற்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் விலகல்

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, பாட்டலி சம்பிக ரணவக, விமல் வீரவன்ஸ போன்ற பிரபல அரசியல்வாதிகள் பலர் பொதுத்தேர்தலில் போட்டியிடாத முதல் சந்தர்ப்பம் இதுவெனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக இந்தத் தேர்தல் தீர்மானம் மிக்கதாக மாறியுள்ளதாக சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இம்முறை 50 இற்கும் மேற்பட்ட பிரபல அரசியல்வாதிகள் பொதுத் தேர்



தலில் போட்டியிடவில்லை என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார். (நி)

# வாக்கு எண்ணும் நிலையங்கள்

## அதிகரிக்கப்படலாம் - தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்கு எண்ணும் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஒதுக்கப்பட்ட நிதியில் எஞ்சிய தொகை உள்ளது.

அத்துடன் பொதுத் தேர்தலுக்காக 11 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கு ஜனா திபதியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலே பொதுத் தேர்தலுக்கும் பயன்படுத்தப்படும்.

பூரணை தினத்தன்று தேர் தல் ஒன்றை நடத்த முடியாது என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் அதற்கு முதல் நாள் தேர்தல் நடத்தக் கூடாதென அறிவிக்கப்படவில்லை என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 7 இல் செவ்<br>கி.பா: 54 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: CIMA,MBA, Senior Accountant(pvt)<br>எதிர்பார்ப்பு: படித்த வேலைபார்க்கும் பெண்<br>தொ.இ: B/14823 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>1இல் செவ்<br>கி.பா: 24 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14842 |
| பிறப்பு:1992இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>8 இல் செவ்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: B.E, Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/14829 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 36 1/4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bsc, Assistant Lecture<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14843 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: A/L, டிசைனர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: B/14833 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>2 இல் செவ்<br>உயரம்:4'8"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/14844 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்களின் விருப்பு எண்கள் அடுத்த வாரம் வெளியிடப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

**ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களுக்கு அமைய வேட்பாளர்களின் விருப்பு எண்கள் அடுத்தவாரத் தொடக்கத்தில் வெளியிடப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**



அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்கும் பணிகள் நிறைவடைந்தன.

இதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களிடம் இருந்து 690 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 764 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றதுடன் அவற்றில் 74 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தங்களது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை நீதிமன்றத்தின் ஊடாக சவாலுக்கு உட்படுத்துவதற்குச் சகல வேட்பாளர்களுக்கும் சந்தர்ப்பம் உள்ளது.

சுயேட்சை குழுக்களுக்கான சின்னங்களும் விருப்பு எண்ணும் அந்தந்த மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியின் ஊடாக வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

# விலகினார் மன்னப்பெரும

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல் செய்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தேர்தலில் இருந்து விலகுவதாகவும் கட்சியில் இருந்து விலகுவதாகவும் அறிவித்துள்ளார்.

இதனை நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா தொகுதியின் பிரதம அமைப்பாளர் பதவியில் இருந்து தாம் நீக்கப்பட்டமையினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# தேர்தல் பிரசாரத்திற்கு விசேட பாதுகாப்பு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு இடம்பெறவுள்ள தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வேலைத்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்படும் தகவல்களுக்கு அமைய உரிய பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# சர்வதேச சந்தையில் அதிகரிக்கும் எரிபொருள் விலை

## இலங்கையிலும் தாக்கம் செலுத்தும்

(கொழும்பு)

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை மேலும் உயர்ந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

செப்ரெம்பர் மாத தொடக்கத்தில் இருந்து ஒரு பரல் கச்சா எண்ணெய் விலை பத்து சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

மத்திய கிழக்கின் இராணுவ நிலைமை எரிபொருள் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கத்தேய நாடுகளுக்கான எரிபொருள் தேவை.

மேலும் குளிர்காலம் தொடங்கியுள்ள நிலையில், மேற்கத்தேய நாடுகளுக்கான எரிபொருள் தேவை அதிகமாக இருப்பதும் இதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல், ஈரான் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா இடையேயான போர்ச் சூழ்நிலை நீடித்தால், செங்கடல் ஊடான கப்பல் போக்குவரத்துக்கு இடையூறாக அமையும்.

இதனால் எரிபொருள் போக்குவரத்துப் பாதைகள் தடைப்பட்டு கச்சா எண்ணெய் விலை மேலும் உயரும் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பானது இலங்கையிலும் தாக்கத்தை செலுத்துமென தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு இலங்கையில் எரிபொருள் விலை அதிகரித்தால் மீண்டும் பொருட்களின் விலைகள் உயர்வடைவதுடன் மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுக்கநேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# தேர்தலில் இருந்து ஒதுங்கினார் லொஹான்

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளார்.


அதன்படி அவர் இந்த தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று இராஜாங்க அமைச்சராக பதவி வகித்தார்.

தொடர்ந்து நடந்த போராட்டத்தின் பின்னர், ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் அமைச்சர் பதவியையும் வகித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



# அணு ஆயுதத்திற்கு எதிராக அமைதிக்கான நோபல் பரிசு




(டோக்கியோ)

ஜப்பானில் உள்ள நிஹான் ஹிடான்க்யோ அமைப்பு 2024 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ளது.

இந்த அமைப்பு இரண்டாம் உலகப் போரின் போது ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது அணு குண்டு வீசப்பட்டதில் உயிர் தப்பியவர்களின் சமூகமாகும்.

இவர்கள், அணு ஆயுதங்களுக்கு எதிரான பிரசாரத்தில் பெரும் பங்காற்றியமைக்காக இந்தப் பரிசை பெற்றுள்ளனர்.

ஹிபாகுஷா என அழைக்கப்படும் குறித்த அமைப்பினர், அணு ஆயுதங்களை உலகில் மீண்டும் பயன்படுத்தப்படக் கூடாது என வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஏமாற்றி இறக்குமதியான மகிழுந்து அரசுடைமையானது

(கொழும்பு)

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைப்பற்றப்பட்ட சொகுசு ரக மகிழுந்து ஒன்றை அரசுடைமையாக்குவதற்கு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போலியான தகவல்கள் வழங்கப்பட்டு குறித்த மகிழுந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனூடாக அரசாங்கத்துக்கு ஐந்தரைக் கோடி ரூபாவுக்கும் அதிக வரி வருமானம் இல்லாமல் போயுள்ளதாகக் கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் பதுளையில் உள்ள வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் குறித்த மகிழுந்தைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்கு உற்சாகத்தையும், தன்னம்பிக்கையும் அளிக்கும் போது தனது சுயமரியாதை தானாகவே உயரும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# 113 இற்கும் அதிகமான ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய நம்பிக்கை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நிச்சயமாக தேசிய மக்கள் சக்தி 113இற்கும் அதிகமான ஆசனங்களைப் பெறும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

சிறந்த அணி ஒன்று எம்மிடம் இருக்கின்றது. நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் சிறந்த அணியொன்றை எம்மால் உருவாக்க முடியும் என்றும் நினைக்கின்றேன்.

நாங்கள் வாக்குறுதியளித்தபடி புதிய முகங்களைப் பாராளுமன்றத்திற்குள் உள்வாங்குவதே எமது நோக்கம். நாட்டு மக்களுக்கு நாங்கள் எப்போதும் பொய்யான வாக்குறுதிகளை வழங்கவில்லை. நாங்கள் கூறியவற்றை நிச்சயம் செய்வோம்.

ஜனாதிபதித் தேர்தலின் போது எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவற்றை முன்வைத்துள்ளோம்.

நாட்டில் இருக்கும் ஏனைய அரசியல் தரப்புக்களோடும் இணைந்து பணியாற்ற நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால் திருடர்களோடு எமக்குக் கொடுக்கல் வாங்கல் இல்லை. நாட்டு மக்களை ஏமாற்றியவர்களுடனும் நாங்கள் கொடுக்கல் வாங்கல் செய்யமாட்டோம்

எனினும், நாட்டை ஸ்திரப்படுத்தும் அர்ப்பணிப்போடு செயல்படும் அனைவரோடும் நாம் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றோம்.

நிச்சயமாக எங்களால் பொதுத் தேர்தலில் 113 ஆசனங்களை அல்லது அதற்கு அதிகமாகவும் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கான முழு நம்பிக்கை எம் அணியினரிடம் உண்டு என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# ஜனாதிபதி அநுரவுக்கு ஓர் அவசர மடல்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அன்பு வணக்கம்.

தாங்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் திருப்தி தருவதாக உள்ளன.

எனினும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை ஏற்க முடியாதென தங்கள் அரசாங்கம் கூறியமை அதிர்ச்சியைத் தருகிறது.

பரவாயில்லை. அதை ஒரு தனி அத்தியாயமாகப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்.

இப்போது நாம் தங்களுக்கு இவ் அவசர மடலை எழுதுவதற்கு மூலகாரணம், கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான 11 ஆயிரம் ஏக்கர் நிலத்தை குறுங்காலப் பயிர்ச்செய்கையின் பொருட்டு விவசாயிகளுக்கு பிரித்து வழங்குமாறு தாங்கள் விடுத்த உத்தரவைக் கண்ணுற்றோம்.

உண்மையில் தங்களின் மேற்படி உத்தரவு வரவேற்கப்பட வேண்டும்.

ஒரு சொட்டு மழைநீரைக் கூட கடலில் கலக்கவிடக்கூடாது என மன்னன் பராக்கிரமபாகு கூறியதுபோல், ஒரு சொட்டு நிலமேனும் பயிர்செய்யப்படாமல் வீணேவிடப்படலாகாது.

இந்த இலக்கோடு பயணிக்கும்போதுதான் எங்கள் நாடு உணவில் தன்னிறைவை அடைய முடியும்.

அந்தவகையில் இதுகாறும் வெறுமனே கிடந்த 11 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வேளாண்செய்கையின் பொருட்டு விவசாயிகளுக்குப் பகுத்து வழங்குவதென்பது மக்கள் நலன் சார்ந்த திட்டம்.

அதேநேரம் இதுவரை காலமும் ஆட்சியில் இருந்தவர்கள் அதுபற்றிச் சிந்திக்காமல் இருந்தபோது, தாங்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு அந்த நிலத்தில் பயிர் செய்வதற்கு வழிகோலியமை ஏழை விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றுகின்ற உன்னதப் பணித் திட்டமாகும்.

எனவே அதுகுறித்து எமது பாராட்டுக்களைத் தங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

நிற்க! கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான 11 ஆயிரம் ஏக்கர் நிலத்தை சிங்கள விவசாய மக்களுக்குப் பகிர்ந்து வழங்கிய தாங்கள்; தமது சொந்த நிலத்தில் குடியிருக்கவும் வேளாண் விவசாயம் செய்யவும் முடியாமல் அந்தரிக்கின்ற வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் அவலத்தை நிச்சயம் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறோம்.

ஆம், படையினரின் ஆக்கிரமிப்பாலும் சிங்கள மக்களின் சட்டவிரோத காணி அபகரிப்பாலும் தமிழ் மக்கள் தமது சொந்த நிலத்தில் விவசாயம் செய்ய முடியாமல் ஏங்கித் தவிக்கின்றனர்.

ஆகையால், படையினரின் ஆக்கிரமிப்பாலும் ஏனைய சட்டவிரோதச் செயற்பாடுகளாலும் தமிழ் மக்கள் இழந்து போன அவர்களின் சொந்த நிலத்தை மீளவும் அவர்களுக்கு வழங்கி அந்த மக்களும் வேளாண் விவசாயம் செய்து வாழ்வதற்கு தாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இந்தக் கடிதத்தை தங்களுக்கு எழுதுகின்றோம்.

# நாவலர், விபுலானந்தர் நினைவு விழா

இந்து வித்யா விருத்திச் சங்கத்தின் அனுசரணையில் அகில இலங்கை இந்துமாமன்றம் சைவத்தமிழ் சமூக மாற்றத்திற்கான பணிகளில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலப்பெருமான் மற்றும் சுவாமி விபுலானந்தர் (ஒப்பியல் நோக்கு) எனும் கருப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்துள்ள ஆறுமுகநாவலரையும் விபுலானந்த அடிகளாரையும் நினைவு கூரும் விழாவானது இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு 4 லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்துக்கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் ரமணராஜா அவர்கள்சிறப்பு அதிதியாகக்கலந்து கொண்டு நினைவுப் பேருரையினையும் ஆற்றுவார். (ம-7)

# மாத்தறையில் ரயில் மோதி குழந்தை உட்பட மூவர் உயிரிழப்பு

(மாத்தறை)

மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி 3 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் குறித்த மூவரும் ரயிலில் மோதி விபத்துக்குள்ளானதாக தெரியவருகிறது.

இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மூன்று வயதுக் குழந்தை காயமடைந்த நிலையில் களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

உயிரிழந்த மூவரும் களுத்துறை தெற்கு ரஜவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 ஜீப் வாகனங்கள் மீட்பு

(கொழும்பு)

தங்கல்ல பிரதேச சபை முன்னாள் உப தலைவர் அமில் அபேசேகரவினால் பெலியத்த, புவக்தண்டாவ வீரசிங்க வீதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட ஜீப் வாகனத்தை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தங்காலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே மேற்படி வாகனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 1997 துரித இலக்கத்திற்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக, பெலியத்த, கொஸ்கஸ்லந்த பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனிக்கு சொந்தமான கறுப்பு நிற Land Cruiser ஜீப் ஒன்றையும் பெலியத்த பொலிஸார் கைப்பற்றினர். (ம-7)

# 81 கிலோ கஞ்சாவுடன் கிளிநொச்சி இளைஞன் உட்பட இருவர் கைது

(கொழும்பு)

81 கிலோ கஞ்சாவுடன் கிளிநொச்சி இளைஞன் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வலஸ்முல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போவல பிரதேசத்தில் கேரள கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (11) காலை கைது செய்யப்பட்டுள்ளதாக வலஸ்முல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

வலஸ்முல்ல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் வலஸ்முல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 27 மற்றும் 42 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 81 கிலோ 690 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வலஸ்முல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# புத்தளத்தில் விபத்து இராணுவ சிப்பாய் பலி

புத்தளம் கற்பிட்டி பகுதியில் இருந்து பாலாவி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விலகி விபத்துக்குள்ளானதில் இராணுவ சிப்பாய் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை இரவு கற்பிட்டி பாலாவி பிரதான வீதியின் கரம்பை பாலத்திற்கு முன்னால் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஆன மடுவ தோனிகலைப்பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இராணுவ சிப்பாய் எனவும் புத்தளம் புணர்வாழ்வு நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# ஹெரோயின் போதையுடன் கொழும்பில் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு கல்கிசை பொலிஸ் பிரிவுற்குட்பட்ட படோவிட்ட மற்றும் ஒபியன் சந்திக்கு அருகில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக கல்கிசை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கல்கிசை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இரு சுற்றிவளைப்புக்களின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டனர்.

இரத்மலானை மற்றும் கல்கிசை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 41 மற்றும் 45 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிசன மதிப்பீடு முல்லையில் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

2024 ஆம் ஆண்டுக்கான குடிசனத்தொகை மதிப்பீடானது முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.


முல்லைத்தீவு மாவட்டத்தின் கரை துரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பிரதேச செயலர் திருமதி.ம. உமா மகள் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது.

இதன் போது மாவட்ட பிரதம கணக்காளர் ம. செல்வரட்ணம், மாவட்ட புள்ளி விபரவியல் இராஜசூரி, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட குடிசன மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள், இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் துறை சார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கணக்கெடுப்பானது இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற 15 ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# 'சதொச' எலும்புக்கூடுகள்

## மேலதிக ஆய்விற்காக கொழும்பிற்கு



(மன்னார்)

மன்னார் "சதொச" மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 16 ஆம் மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் அன்றைய தினம் உரிய சான்றுப் பொருட்களை கொழும்பில் உள்ள நிறுவனங்களுக்கு எடுத்துச் சென்று மேலதிக ஆய்வு குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் தெரிவித்தார்.

மன்னார் "சதொச" மனித புதைகுழி தொடர்பில் வினவிய போதே காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் இவ்வாறு தெரிவித்தார்.

"சதொச" மனித புதைகுழி தொடர்பான வழக்கு கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நேற்று முன்தினம் வரை ஏற்கனவே சதொச மனித புதைகுழியில் அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளோடு வேறு பொருட்கள் காணப்படும் பெட்டிகள், பொதி செய்யப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பான மேலதிக விடயங்கள் சம்பந்தமாக மனித எலும்புகள் குறித்து சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையும் மீட்கப்பட்ட ஏனைய பொருட்கள் குறித்து களனி பேராசிரியர் ராஜ்சோமதேவவின் தொல்பொருள் அறிக்கையையும் நீதிமன்றம் கோரியுள்ளது.

குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வரும் புதன் கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, இவ்விடயம் தொடர்பாக தீர்மானிக்கப்படவுள்ளது.

அதேவேளை உரிய சான்றுப் பொருட்களை கொழும்பில் உள்ள தமது நிறுவனங்களுக்கு எடுத்துச் சென்று அகழ்வாராய்ச்சி செய்து அவை எக் காலப்பகுதிக்கு உரியது என தொல்பொருள் திணைக்களமும் அந்த எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் இறப்புக்கான காரணம், வயது, பாலினம் போன்ற விடயங்கள் தொடர்பான அறிக்கையையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார். (6-285)

# முரசுமோட்டை பகுதியில் மோ.சைக்கிள் மீட்பு



(கண்டாவளை)

கிளிநொச்சிமுரசுமோட்டை பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இரண்டு நாட்களுக்கு மேலாக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை கிளிநொச்சி பொலிஸார் மீட்டுள்ளனர்.

பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியின் முரசுமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் ஒன்று அனாதரவாக விடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில் மோட்டார் சைக்கிள் சந்தேகத்துக்கிடமான முறையிலே நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதை பிரதேச மக்கள் அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளை மீட்டுள்ளனர் .

இவ்மோட்டார்சைக்கிள் களவாடப்பட்டு கொண்டு வந்து நிறுத்தப்பட்டதா? என பல்வேறு கோணங்களில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-315)

# தமிழரசுக் கட்சியின்

## வெற்றிக்காக உழைக்க வேண்டும்

### சிறீதரன் தெரிவிப்பு



(கண்டாவளை)


தற்போதைய களச்சூழலில் தமிழரசுக் கட்சியினுடைய வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்று முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சி அலுவலகமான அறிவகத்தில் நேற்று விஜயதசமி விழாவும் மாவட்டத்தின் இலங்கை தமிழரசு கட்சியினுடைய வட்டார உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது

இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

வேட்பாளர்கள் நியமனங்களில் திருப்தி இருக்கா? இல்லையா என்பதற்கு அப்பால் இப்போதைய காலச்சூழலில் கட்சியினுடைய வெற்றிக்காக உழைக்க வேண்டி வேண்டும். அதுவே எனது நிலைப்பாடு என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6-315)

# அறுவடையான பூசணிக்காய்கள் சந்தைப்படுத்துவதில் நெருக்கடி



(அக்கராயன்)

கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராமத்தில் இம்முறை பூசணி செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த பூசணிக்காய்களை சந்தைப்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டி உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள கண்ணகைபுரம் கிராமத்தில் நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் பூசணிச் செய்கை மேற்கொண்டிருந்தனர்

இந்த நிலையில் குறித்த பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பூசணிக்காய்களை சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக குறித்த பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இதேவேலை ஒருவகையான நோய் தாக்கம் காரணமாகவும் பூசணிச் செய்கை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் சுட்டிக் காட்டி உள்ளனர். (6-315)

# வாசிப்பு மாத செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுசன நூலகம் சிறுவர் பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு அமெரிக்கன் கோணர் அமைப்பினால் விசேட வாசிப்பு மாத செயற்பாடுகள் இடம்பெறும் என யாழ்.பொதுசன பிரதம நூலகர் அறிவித்துள்ளார். (6)

# நகை,பணம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்- நவாலி பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது வீட்டில் நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன நேற்று களவாடப்பட்டுள்ளது.6 அரை பவுண் நகை மற்றும் 29 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6)

# பளுதூக்கல் போட்டியில் யாழ். இளைஞன் சாதனை



(யாழ்ப்பாணம்)

தென்னா பிரிக்காவில் நடைபெற்ற பொது நலவாய நாடுகளுக்கு இடையிலான (Powerlifting)பளு தூக் கல் போட்டிகளில், யாழ். சாவகச்சேரியைச் சேர்ந்த சற்குண ராசா புசாந்தன் 3 பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளில், 120 கிலோ எடைப் பிரிவில், Dead Lift போட்டியில் தங்கப்பதக்கத்தையும், Bench Press போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், Squats போட்டியில் வெண்கலப் பதக்கத்தை யும் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

சற்குணராசா புசாந்தன், யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவனாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரதமர்...

பயன்படுத்துவதற்கு அனுமதி பெறப் பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## பொலிஸ்...

நகை மற்றும் 29 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். (ம-7)

## வல்லைப்...

ழந்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் விஜயதசமியான நேற்றுத் தனது குழந்தைக்கு ஏடு தொடக்கி விட்டு யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவரே முற்பகல் 9.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் உயிரிழந்தார்.

இதில் மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டித்துறையில் வசித்து வந்தவருமான துரைலிங்கம் மலைமகன் (வயது-38) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

வல்லைப் பாலத்தில் மழை பெய்து கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள், பட்டா வாகனம் மற்றும் முச்சக்கர வண்டி என்பன மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி சாரதி வாகனத்துடன் தப்பிச்சென்ற நிலையில் பட்டா வாகனச் சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர்.

வல்லைப் பாலத்தடியில் ஒரு மாதத்தில் மட்டும் 6 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ம-7,33,60)

## தேர்தல்...

டிக்கை எடுக்க முடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-7)

## பாதிக்கப்பட்ட...

ரணம் வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் விசேட அவதானத்துடன் செயற்படுமாறும், நிவாரணப் பணிகளை வினைத்திறனாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

அத்துடன் அவசரகால நிலைமையால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தேவையான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்தந்த மாகாணங்களின் அரச அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் அந்த நிவாரணங்களை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

அதுவரை மக்களை அவதானமாக இருக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார். இந்த நிவாரணப் பணிகளுக்காக 50 மில்லியன் ரூபாயை ஒதுக்குமாறு நிதியமைச்சிற்குப் பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, உரிய நிவாரணங்களை முறையாக மக்களுக்கு வழங்குவதற்கு நன்கு ஒருங்கிணைந்து செயற்படுமாறும் அரச அதிகாரிகளுக்கு மேலும் அறிவித்துள்ளார்.(ம-7)

## 7 வழக்குகளின்...

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

7 வழக்குகளுக்கான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுப் பணிப்புரை விடுத்துள்ளது.

அதற்கமைய 2015 சர்ச்சைக்குரிய பிணை முறி விவகாரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், தினேஷ் ஷாப்டர் மரணம், ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை, லலித், குகன் காணாமலாக்கப்பட்ட வழக்கு, வெலிகமவில் துப்பாக்கிச்சூட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் மரணம், 2007ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ரவீந்திரநாத் [illegible] மல்போன [illegible]

# டி.ஜே. இசையை குறைக்குமாறு கூறிய நபர் படுகொலை

(கொழும்பு)

அங்குலானை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்தவர் லுணாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

அங்குலானைப் பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதான நபரே தாக்குதலில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருமண நிகழ்வின்போது அதிக சத்தத்துடன் டி.ஜே இசைக்கப்பட்ட போது அதனைக் குறைக்குமாறு உயிரிழந்த நபர், கூறிய போதே வாக்குவாதம் ஏற்பட்டு இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தின் பின்னர் சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ள நிலையில், அங்குலானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(ம-7)

கான விசாரணைகளையே இவ்வாறு துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-7)

## வீதியில்...

தல் நடத்தி விட்டு இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ்.நகரின் மத்தியில், கஸ்தூரியார் வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கானவர் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவேளை, பின்னால் பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் அவரை வழிமறித்து, ஏன் தாங்கள் முந்திச் செல்வதற்கு வழி விடவில்லை எனக் கேட்டு, தலைக் கவசத்தால் மிக மோசமாகத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ்.நகர் மத்தியில் மிகுந்த சன நடமாட்டம் காணப்பட்ட நேரத்தில் வீதியில் ஒருவரை வழிமறித்துத் தாக்கிவிட்டு இருவர் தப்பிச் சென்றமை பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

தாக்குதல் தொடர்பிலான வீடியோக் காட்சிகள் கடை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களில் பதிவாகியுள்ளது.

அதன் அடிப்படையில் பொலிஸார் தாக்குதலாளிகளை இனம் கண்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## அமை...

என.

இது தவிர மஹிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணதுங்க, ரோஹித அபேகுணவர்தன மற்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் விசாரணைகள் தொடர்பான விபரங்கள் விரைவில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.10.12 — சீட்டிழுப்பு இலக்கம் 5623 — G 8 0 3 7 8 6
அத சம்பத — G 3 7 8 6 — சீட்டிழுப்பு இலக்கம் 198

தன நிதானய — திகதி -2024.10.12 — சீட்டிழுப்பு இலக்கம் - 1653 — Q 16 37 48 50 Q — Double Chance 75887

மெகா பவர் — திகதி 12/10/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1971 — M 04 02 06 09 51 — 84451

லக்கி 7 VIP — திகதி 2024.10.12 — சீட்டிழுப்பு இலக்கம் 0449 — O 2 9 3 7 2 9 O

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3865 — சீட்டிழுப்பு திகதி 12.10.2024 — P 19 44 48 79 — P 35099

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.10.12 — சீட்டிழுப்பு இலக்கம் 932 — தனுசு 19 20 22 49 தனுசு — 71943 — 02

சுப்பர் பல் ... உத்தியோகபூர்வ முடிவுகள் — 12.10.2024 — வெற்றி வாரம் 331 — வர்ணம் நீலம் — V 5 3 1 2 3 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,652,484.00 — 59349

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2597 — வர்ணம் நீலம் — சீட்டிழுப்பு திகதி 12.10.2024 — தினம் சனிக்கிழமை — 18 41 53 75 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,666,435.20

சனிதா — திகதி 2024.10.12 — வெற்றி வாரம் 4758 — 14 27 48 65 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,835,883.20 — 16347

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4309 — வர்ணம் இள நீலம் — சீட்டிழுப்பு திகதி 2024.10.12 — தினம் சனிக்கிழமை — 15 26 34 48 — மேஷம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,146,600.00 — 168558

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — S 16 01 24 33 50 — 1773 — சிவப்பு — 12.10.2024 சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 550,051,271.80

அட கோடிபதி ADA KOTIPATHI — சனிக்கிழமை — வெற்றி வாரம் 2423 — சீட்டிழுப்பு திகதி 2024.10.12 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,915,529.60 — 27 34 55 67 Q — 907004


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# TECHNO WORLD

## A/L தொழில்நுட்பப்பிரிவு

### விசேட செயலமர்வு

| | |
|---|---|
| 15,16,17 October 2024 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 18,19 October 2024 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 20,21 October 2024 | ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம் |

இடம்: வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ். (C-1383)

தொடர்புகளுக்கு : 077 017 5346


# தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுகம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழாவானது இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் இடம்பெறவுள்ளது. (ம-7)


## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (423)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல கல்வி நிறுவனத்திற்கு (சயன்ஸ் வேல்ட்டிற்கு) கணனி அறிவுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. அத்துடன் பகுதி நேர சுத்திகரிப்பாளர் தேவை. (C-1382)

தொடர்புகட்கு :

074 056 7791

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு : (402)

075 033 6759

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 237/= |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= |
| 1Kg திட்டல் பச்சை | - 225/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 380/= |
| 1Kg சம்பா அரிசி | - 228/= |
| 1Kg கீரி சம்பா | - 248/= |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 790/= |
| 1Kg செத்தல் மிளகாய் No1 | - 860/= |
| 1Kg மல்லி | - 380/= |
| 1Kg சோயா | - 440/= |
| 10Kg விகிதா குத்தரிசி | - 2530/= |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 690/= |
| 750 ml Vsp நல்லெண்ணெ | - 1460/= ~~1550/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3390/= ~~3900/=~~ |

400g Anchor

1000/=



~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (423)

Happy Supermarket 0777 8080 30

## வேலையாட்கள் தேவை

இயக்கச்சி தோட்டத்தில் தங்கி நின்று வேலை செய்வதற்கு தனிநபர் அல்லது குடும்பமாக ஆட்கள் தேவை. (422)

001 416 666 1855

075 165 6431

## வயல் காணி விற்பனைக்கு

கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதான வீதியில் வீதியோரமாக 10 ஏக்கர் (8 ஏக்கர் வயல், 2 ஏக்கர் மேடு) உறுதிக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : (2291)

077 645 0375

## பணிப்பெண் தேவை

யாழ். நகருக்கு அண்மித்த பகுதியில் வயோதிபப் பெண்ணை ஒரு மாத காலத்திற்கு வீட்டில் தங்கி நின்று பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. (2290)

077 869 5354

## காணி விற்பனைக்கு

யாழ். K.K.S மயிலிட்டியில் 17 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 7 பரப்பாகவும் விற்கலாம். (2214)

தொடர்புகளுக்கு :

075 521 3533

## "குழந்தையின்மைக்கு சிறந்த தீர்வு"

# மாபெரும் இலவச மருத்துவ முகாம்

கருவளச் சிகிச்சையில் புகழ்பெற்ற வைத்தியநிபுணர்

## Dr.H. ரத்னாயக்கா

அவர்களைச் சந்தித்து ஆலோசனை பெறும் அரியவாய்ப்பு உங்கள் அனைவருக்கும் கிடைக்கின்றது.

காலம் : 15.10.2024 செவ்வாய்க்கிழமை

நேரம் : காலை 8.00 மணி - பிற்பகல் 2.00 மணி

இடம் : இணுவில் - மக்லோட் வைத்தியசாலை

ஏற்கனவே முற்பதிவு செய்தவர்களுடன் அனைவரும் பங்குபற்றலாம்.



கருவளச் சிகிச்சைக்கு வருவதற்கு யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து கே.கே.எஸ் வீதி ஊடாக இணுவிலிற்கு 16 நிமிடங்கள் மட்டுமே

தொடர்புகளுக்கு

077 121 5005, 076 011 4702, 021 224 1569

மக்லோட் வைத்தியசாலை, கே.கே.எஸ் வீதி, இணுவில், யாழ்ப்பாணம். (C-1384)

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தரம் 10. O/L, A/L படித்த இளைஞர் யுவதிகளை இணைக்க உள்ளோம். 29.500-45.000 வரை சம்பளம் பெற்றுக் கொள்வதோடு தகுதி காண் காலத்தில் சம்பள உயர்வு மற்றும் EPF, ETF பெற முடியும். முற் பதிவுகளுக்கு உங்கள் பெயர். NIC இலக்கத்தினை 077 985 8580 whatsapp செய்யவும்.

076 774 3440

077 572 1369 (424)

## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2026ல் நீங்களும் அமெரிக்காவில்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226244

எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்

விண்ணப்ப முடிவு திகதி 05-11-2024

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| 0764550673 | கிளிநொச்சி 0768226240 | யாழ்ப்பாணம் 0777068777 | 0764550675 | சாவகச்சேரி 0768226242 | 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | பண்டத்தரிப்பு 0777718322 | 0777726322 | கோப்பாய் 0764550674 | 0764550671 | 0777720322 |
| 0776699892 | V2 Travels | | 0743900353 | 0768226230 | 0776697960 |


## வீட்டுக் கிருத்திய அழைப்பு



08.09.2024 சிவன் தாழ் சேர்ந்த

## அமரர் கனகசபாபதி நமநாதன்

(முன்னாள் காணி குடியேற்ற அதிகாரி, பிரபல சட்டத்தரணி)

13.10.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று அவர்களின் இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

55, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (2279)

இங்ஙனம்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org